# வருவாய்த் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2012 – 2013

மானியக் கோரிக்கை எண்.41 – வருவாய்த்துறை

மானியக் கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**கே.ஏ. செங்கோட்டையன்**
வருவாய்த் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2012

# <u>பொருளடக்கம்</u>


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| முன்னுரை | 1-3 |
| வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | 3-38 |
| நில நிருவாகம் | 38-61 |
| நிலச் சீர்திருத்தம் | 61-78 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 78-83 |
| நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் | 84-105 |
| முடிவுரை | 105-106 |

# வருவாய்த் துறை

## முன்னுரை

மாநிலத்தில் உள்ள நிருவாக அமைப்புகளில் வருவாய்த் துறை மிகவும் பழமையானதும் பெருமைக்குரியதும் ஆகும்.

முன்பு செயல்பட்டு வந்த வருவாய் வாரியத்தின் பணிகள் தற்போது வருவாய் நிருவாகத் துறை, நில நிருவாகத் துறை, நிலச் சீர்திருத்தத் துறை, போக்குவரத்துத் துறை, வணிகவரித் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை ஆகிய பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்றன.

வருவாய் நிருவாகத் துறையின் கீழ், மாவட்ட வருவாய் மற்றும் பொது நிருவாகம், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், சமூக நல பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற பணிகள் முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரால் கவனிக்கப்படுகிறது.

நில நிருவாகத் துறையின் கீழ், நிலம் கையகப்படுத்துதல், நில உரிமை மாற்றம், நில ஒப்படை, வீட்டு மனை ஒப்படை, நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல் மற்றும் நிலப்பட்டாக்கள் வழங்குதல் குறித்த

பொருள்கள் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையரால் கவனிக்கப்படுகிறது.

நிலச்சீர்திருத்தத் துறையின் கீழ், நிலச்சீர்திருத்தம், வேளாண்மை நில உச்சவரம்பு, குடிவாரச் சட்டம், வேளாண்மை பயன்பாட்டிற்காக உபரி நிலங்களை ஒப்படை செய்தல் ஆகிய பணிகள் முதன்மைச் செயலாளர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரால் கவனிக்கப்படுகிறது.

நில அளவை பதிவேடுகள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. நில அளவை, வருவாய் பதிவேடுகள் பராமரித்தல், நில ஆவணங்களை கணினிமயமாக்குதல், தொடு திரை தகவல் மேடை, பூகோள ரீதியான அளவைப் பணி போன்றவை இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி துறை, நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

மாவட்ட அளவில் இப்பணிகள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய்

ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களின் உதவியுடன் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

### 1.1 வருவாய் நிருவாகம்

அரசு பொது நிருவாகத்தின் முதுகெலும்பான மாவட்ட வருவாய்த் துறை, வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை நிருவாகத்தின் பொறுப்பில் உள்ளது. சான்றிதழ்களை வழங்கி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பல மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன் இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரண உதவி அளித்தல் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வது ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

மாநிலத்தில் தற்போது 32 மாவட்டங்கள், 76 வருவாய்க் கோட்டங்கள், 220 வட்டங்கள், 1127 குறுவட்டங்கள் மற்றும் 16564 வருவாய் கிராமங்கள் உள்ளன.

நிருவாகத்தை திறம்பட செயல்படுத்தவும், மக்களுக்கு சேவைகளை விரைவாக அளிக்கவும் பொன்னேரி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து மாதவரம் மற்றும்

அம்பத்தூர் வட்டங்களை உள்ளடக்கிய அம்பத்தூரை தலைமையிடமாகக் கொண்ட புதிய அம்பத்தூர் கோட்டம் உருவாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் அறிவித்தார்கள். இதற்கிணங்க அம்பத்தூர் வருவாய்க் கோட்டத்தை உருவாக்கும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## 1.2 பொது மக்கள் குறை தீர்க்கும் திட்டம்

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சியர்கள் / வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே இருந்து, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றனர்.

முதியோர் ஓய்வூதியம், பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டா, குடும்ப அட்டைகள் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே பெரும்பான்மையான மனுக்கள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தினை சீராகவும், செம்மையாகவும் செயல்படுத்தவேண்டி, அரசாணை (நிலை) எண்.364, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 28.11.2011ன்படி, தற்போது மனுக்களை கோரிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தி, மனு பெறப்பட்ட நாள் மற்றும் மனுதாரருக்கு முடிவான பதில் அனுப்பிய நாள் ஆகியவற்றை கணினியில் பதிவு செய்து, அனைத்து

மாவட்டங்களிலும் ஒரே சீராகப் பயன்படுத்தும் வகையிலான பொதுவான மென்பொருள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரே கோரிக்கையின் பொருட்டு பல முறை பெறப்படும் மனுக்களை தனியே பிரித்தறியும் வகையில் மனுக்களின் மீதான நடவடிக்கையின் நிலை குறித்து அறிய மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மனுக்களின் நிலுவை மற்றும் தீர்வின் தரம் குறித்து ஆய்வு மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுக்களின் முடிவு விபரங்கள் 'இணையதளம்' மூலமாகவே பதிவு மேற்கொள்ளப்படுகிறது.

## 1.3 மக்கள் தொடர்பு முகாம் திட்டம்

மக்கள் தொடர்பு முகாம் திட்டம் மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், மாதத்தின் இரண்டாம் புதன்கிழமை அன்று நடத்தப்படுகிறது. வட்ட தலைமையிடத்திலிருந்து மிகவும் தொலைவில் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கி இத்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இந்நாளில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்டத்தின் அனைத்து முக்கிய அலுவலர்களும் அக்கிராமத்திற்குச் சென்று பொதுமக்களை சந்தித்து குறைகளை நேரில் கேட்டறிந்து, கிராம பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு

காண்கின்றனர். முதியோர் ஓய்வூதிய ஆணைகள், வீட்டு மனைப்பட்டாக்கள் மற்றும் பட்டா மாறுதல் தொடர்பான ஆணைகள் ஆகியவற்றை நேரடியாக பொதுமக்களுக்கு வழங்க இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

கிராம பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறுவதற்கு முன் கூட்டியே தகவல் அளிக்கப்படாமல், முகாம் நடைபெறும் நாளன்றுதான் பெரும்பான்மையான மனுக்கள் பெறப்படுவதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மேலும் பயனுள்ளதாகச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.244, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 08.08.2011—ன்படி 1) தனித் துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) 2) வருவாய்க் கோட்டாட்சியர் 3) மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றினை ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று கிராமத்திற்கு அனுப்பி மனுக்களைப் பெற்று பதிவு செய்ய வேண்டுமென அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு பெறப்படும் அனைத்து மனுக்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து

பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, அடுத்த மாதத்தில் இரண்டாம் புதன்கிழமையன்று மாவட்ட ஆட்சித்தலைவர் கிராமத்திற்கு செல்லும் நாளன்று மனுதாரர்களுக்கு முடிவான பதில் வழங்கிடும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 1.4 சமூகப் பாதுகாப்புத் திட்டம்

தமிழக அரசு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தை மாதம் ரூ.500/– என்பதிலிருந்து ரூ.1000/– ஆக 2011 மே மாதம் முதல் உயர்த்தியுள்ளது. பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (29.02.2012 வரை) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 12,04,245 |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 45,180 |
| 3 | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 3,35,103 |
| 4 | ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 1,33,188 |
| 5 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 4,24,367 |
| 6 | கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,20,849 |

| | | |
|---|---|---|
| 7 | 50 வயது எய்தியும் வாய்ப்பு வசதியில்லாததால் திருமணமாகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற ஏழை பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 16,768 |
| 8 | ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்* | 3,61,421 |
| | மொத்தம் | 26,41,121 |

** முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

திட்டங்களை செயல்படுத்துபவர் வட்ட அளவில், தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆவார்.

ஓய்வூதியம் கோரும் மனுக்கள் கிராம நிருவாக அலுவலரால் கிராமங்களில் பெறுவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு இருமுறை, பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது ஆண் பயனாளிக்கு ஒரு வேட்டியும், பெண் பயனாளிக்கு ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது. மேற்காணும் திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு குழந்தைகள் மையங்களில் (அங்கன்வாடி மையங்கள்) உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை ஒருவருக்கு 4 கிலோ வீதம் சன்ன ரக அரிசியும், உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை ஒருவருக்கு 2 கிலோ வீதம் சன்ன ரக அரிசியும் வழங்கப்படுகிறது.

### 1.4.1 பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல்

2011–ம் ஆண்டு, மேதகு ஆளுநர் உரையில், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகை பயனாளிகள் பெயரில் வைப்பில்லா வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு வங்கிகள் மூலமாக பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையை உபயோகப்படுத்தி வங்கிச் சேவையாளரால் கிராமங்களில் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கிணங்க, கடலூர் மாவட்டத்தில், காட்டுமன்னார் கோயில் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டம் ஆகிய வட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், இப்பகுதிகளில் இருக்கக் கூடிய பொதுத்துறை வங்கிகளின் கிளைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வங்கியும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கிராமங்களில் வங்கிச் சேவையாளர்களை நியமித்து சேவையை துவங்கி உள்ளது. வங்கிச் சேவையாளர்கள் பயனாளிகளின் வசிப்பிடங்களுக்கு நேரில் சென்று சாதாரணமாக மக்கள் கூடும் எளிதில் அணுகக் கூடிய இடங்களில் ஓய்வூதியத்தை வழங்கி வருகின்றனர். வங்கிச்

சேவையாளர்கள் அச்சுப்பொறியுடன் (Printer) கூடிய பயோமெட்ரிக் மற்றும் பயனாளியின் கைவிரல் ரேகையை அடையாளம் காட்டக்கூடிய இயந்திரத்தை எடுத்துச் செல்கின்றனர். பயனாளியின் பயோமெட்ரிக் தகவல்களின் நம்பகத் தன்மையை இந்த இயந்திரம் உறுதி செய்த பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தற்போது, இம்முன்னோடித் திட்டத்தினை மாநிலத்திலுள்ள மற்ற பகுதிகளுக்கும் மூன்று கட்டங்களாக விரிவுபடுத்த அரசாணை (நிலை) எண். 14, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 25.01.2012–இல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி,

முதற்கட்டமாக 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகள் மூலம் ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டம் 30.06.2012க்குள் செயல்படுத்தப்படும்.

இரண்டாம் கட்டமாக, 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,000 முதல் 2,000 வரை மக்கள் தொகை உள்ள அனைத்து கிராமங்களில் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி

வங்கிகள் மூலம் ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மூன்றாம் கட்டமாக, இதர கிராமங்களிலும், நகரப் பகுதிகளிலும் பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகள் மூலம் ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

முதற்கட்டத்தில், 4,176 கிராமங்களில் சுமார் 7 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

## 1.5 மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்

அரிசி பெறும் தகுதியுள்ள குடும்ப அட்டை பெற்றுள்ள குடும்பங்களைச் சார்ந்த மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்கும் பொறுப்பு வருவாய்த் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1.83 கோடி பயனாளிகள் படிப்படியாக பயன்பெறவுள்ளனர். 2011–12ஆம் ஆண்டிற்கு 25 லட்சம் பயனாளிகளுக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15.09.2011 அன்று திருவள்ளூர்

மாவட்டத்தில் காக்களூர் கிராமத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மலைவாழ் பகுதியான நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதியிலும் மின்விசிறிக்குப் பதிலாக மின் அடுப்பு வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டு தற்போது இப்பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்துவதற்காக **839** சிறப்பு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 1.6 பள்ளிகள் வாயிலாக மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல்

வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு தேவைப்படும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியில் சேருவதற்கும், கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், தேவைப்படும் மூன்று முக்கிய சான்றிதழ்கள் சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகும்.

மேற்கண்ட சான்றிதழ்கள் பெறுவதற்காக மாணவர்களுக்கு ஏற்படும் காலதாமதம் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் நோக்கத்துடன் 10–ஆம் வகுப்பு மாணவர்கள் அவர்கள் பயிலும் பள்ளிகள் மூலமாகவே,

குறிப்பிட்ட காலவரையறைக்குள் சான்றிதழ்களைப் பெற ஏதுவாக அரசாணை (நிலை) எண்.246, வருவாய் [வ.நி.3(2)] துறை, நாள் 09.08.2011–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

10–ஆம் வகுப்பில் பயிலும் 9,85,510 மாணவர்களில் 4,45,787 மாணவர்கள் ஏற்கெனவே சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். மீதமுள்ள 5,39,723 மாணவர்களில் 5,36,663 மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியுள்ள 5,36,431 மாணவர்களுக்கு பள்ளிகள் மூலமாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 1.7 விலையில்லா சேலைகள் / வேட்டிகள் ஏழை மக்களுக்கு வழங்குதல்

விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு பொங்கல் பண்டிகையின்போது ஏழை எளிய மக்களுக்கு அரசாங்கத்தால் விலையில்லா சேலை / வேட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோ–ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப்படும் விலையில்லா சேலை / வேட்டிகளை ஏழை எளியோருக்கு வழங்கும் பொறுப்பு வருவாய் நிருவாகத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 170.84 இலட்சம் சேலைகளும் மற்றும் 169.75 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

## 1.8 அலுவலகக் கட்டடங்கள்

வருவாய்த்துறை, மாவட்ட நிருவாகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே வருவாய்த்துறைக்கு கட்டடங்கள் மற்றும் உரிய கட்டமைப்பு வசதிகள் செய்து தருவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவையாகும். அவ்வப்போது தேவைக்கேற்ப ஆண்டுதோறும் புதிய / கூடுதல் அலுவலக கட்டடங்கள் கட்டவும், உள்கட்டமைப்பு வசதிகள் பெருக்குவதற்கும் மற்றும் பராமரிப்பிற்கும் நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டு வருகிறது.

### 1.8.1 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களில், 31 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் திருப்பூர் ஒருங்கிணைந்த விற்பனைக்கூட வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றன. திருப்பூர் மாவட்ட

ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற துறை அலுவலகம் அடங்கிய பெருந்திட்ட வளாகம் அமைக்க ரூ.52.13 கோடி மதிப்பீட்டிற்கான முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், அம்மாவட்டத்தில் உள்ள பிற துறை அலுவலகங்களும் கொண்ட புதிய வளாகம் அமைக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டின்போது அறிவித்தார்கள். அதற்கிணங்க கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற துறை அலுவலகங்கள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

**1.8.2 வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்**

மாநிலத்தில் மொத்தம் 76 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், 74 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.2.53 கோடி செலவில் தொடங்கப்படும் என அரசு அறிவித்தது. அதன் அடிப்படையில் தாம்பரம் வருவாய்க்

கோட்டாட்சியருக்கான அலுவலகம் அமைக்க ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டாட்சியருக்கான அலுவலகம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**1.8.3 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

மாநிலத்தில் மொத்தம் 220 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 208 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள சோழிங்கநல்லூர், ஆலந்தூர், குத்தாலம், குறிஞ்சிப்பாடி, சூலூர், கரம்பக்குடி, பொன்னமராவதி, ஆம்பூர், மாதவரம், கடவூர், திருவெறும்பூர் மற்றும் மடத்துக்குளம் ஆகிய 12 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இதில் சூலூர், கடவூர் மற்றும் திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான முன்மொழிவுகள் 2012–13ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**1.8.4 வருவாய் ஆய்வாளர்களுக்கான கட்டடங்கள்**

மொத்தமுள்ள 1127 வருவாய் ஆய்வாளர்களில், 1093 வருவாய் ஆய்வாளர்களுக்கு (சென்னை தவிர) அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 34 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியுள்ளது. அதன்படி 34 வருவாய் ஆய்வாளர்களுக்கு புதிதாக அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் படிப்படியாக கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 7 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.79.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**1.8.5 கிராம நிருவாக அலுவலர்களுக்கான கட்டடங்கள்**

மாநிலத்தில் உள்ள 12,507 கிராம நிருவாக அலுவலர்களில் 12,300 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 207 கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் படிப்படியாக கட்டப்படும்.

## 1.9 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

**14.11.2011**–அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அனைத்து கிராம நிருவாக அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், நலப்பணிகள் மக்களுக்கு எளிதில் சென்றடையவும் மடிக்கணினி மற்றும் பிரிண்டர் வழங்கப்படுமென அறிவித்தார்கள். அதன் முதற்கட்டமாக **7787** கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் பிரிண்டர் மற்றும் கணினி பயிற்சி ரூ.**22.49** கோடி செலவில் அளிக்கப்படும். இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **27.03.2012**–அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

## 1.10 புதிய பணியிடம் ஒப்பளிப்பு

மாவட்ட நிருவாகங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வர அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களுக்கு நேர்முக உதவியாளர் (சட்டம்) பணியிடம் உருவாக்க **14.11.2011**–அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டு இதற்கான அரசாணை

வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

**1.11 நில வருவாய்**

தமிழ்நாட்டில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நஞ்சை / புஞ்சை நிலங்கள் கீழ்காணுமாறு:–

| | | |
|---|---|---|
| நஞ்செய் நிலங்கள் | .. | **16,57,676** எக்டேர் |
| புஞ்செய் நிலங்கள் | .. | **67,80,080** எக்டேர் |

நிலவரி விதிப்பு முறை பின்வருமாறு கடைபிடிக்கப்பட்டு வருகிறது

**(அ)** புஞ்செய் நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.**5/–**ம், நஞ்சை நிலத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.**12/–**ம் தீர்வையாக நிருணயிக்கப்படுகிறது.

**(ஆ)** ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடம் எக்டேர் ஒன்றுக்கு ரூ.**12/–** தீர்வையாக நிருணயிக்கப்படுகிறது.

**(இ)** பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை ரூ.**1** என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பசலி **1420 (2010–2011)–**க்கான நிலவரி கேட்பு ரூ.**10.43** கோடி மற்றும்

வசூல் ரூ.10.55 கோடி ஆகும். பசலி 1421 (2011–2012)–க்கான தற்காலிக நிலவரி கேட்பு ரூ.9.76 கோடியாகும். பசலி 1421–க்கான அறுதியிட்ட கேட்பு ஜமாபந்தி முடிவுற்ற பின்னர் இறுதி செய்யப்படும்.

நிலவருவாய் வசூல் ஆண்டு, ஒவ்வொரு வருடமும் சூலை 1–ஆம் தேதி முதல் கணக்கிடப்படுகிறது. வருவாய்த் தீர்வாய நிகழ்ச்சி நிரல் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படுகிறது. வருவாய்த் தீர்வாய நிகழ்வின் மூலம் அனைத்து வருவாய் கணக்குகளும் முடிக்கப்படுகின்றன.

### 1.11.1 நிலவரி தள்ளுபடி

30.12.2011 அன்று ஏற்பட்ட 'தானே' புயலின் காரணத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளுக்கு 1421 பசலிக்குரிய நிலவரியினை முழுமையாகத் தள்ளுபடி செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### 1.12 இயற்கை இடர்பாடுகள் மற்றும் பேரிடர் மேலாண்மை

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை

எடுப்பதிலும், இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதிலும் வருவாய்த் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

பேரிடர் மேலாண்மை குறித்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 'மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்' (State Disaster Management Authority) செயல்படுகிறது. இதற்கான மாநில செயலாட்சிக்குழு (State Executive Committee) ஒன்று தலைமைச் செயலாளர் தலைமையில் செயல்படுகிறது. 'மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்' (District Disaster Management) அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது. பேரிடர் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் செயல்படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 மாவட்டங்கள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகாலங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும்

காற்றழுத்த தாழ்வுநிலை (Trough) மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் (Depression) போன்றவற்றின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

### 1.12.1 பருவ மழை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

வடகிழக்கு பருவமழைக் காலம் துவங்குவதற்கு முன்பாகவே அதனால் ஏற்படக்கூடிய இடர்பாடுகளை செவ்வனே சமாளிக்கும் பொருட்டு தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடத்தப்படுகிறது. இதே போன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டத்தில் பெறப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துருக்களின் அடிப்படையில், பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாதிரி செயல்முறை பயிற்சிகளும் (Mock Drill) நடத்தப்படுகின்றன.

மாநில அளவிலான அவசரகால செயல் மையம் மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் ஆண்டு முழுவதும் செயல்படுகிறது. இம்மையத்தில் இயற்கை இடர்பாடுகளின்போது ஏற்படும் பேரிடர்களுக்கு

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உடனடி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு இயற்கைச் சீற்றங்கள் குறித்த முன்னெச்சரிக்கை தகவல்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு தகவல் அனுப்பப்படுகிறது. இம்மையத்தில் தொலைபேசி, கணினி மற்றும் நிகரி வசதிகள் மட்டுமின்றி பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்காக 1070 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசியும் உள்ளது.

### 1.12.2 மழைமானி நிலையங்கள்

தமிழ்நாட்டில் பரவலாக 395 இடங்களில் மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் நாள்தோறும் பதிவாகும் மழையளவு விபரங்கள் மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த மழைமானி நிலையங்கள், அவ்வப்போது இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அலுவலர்களாலும், வருவாய்த் துறை அலுவலர்களாலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

### 1.12.3 புயல் பாதுகாப்பு இல்லங்கள்

இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க தமிழ்நாட்டில் 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 121

பல்நோக்கு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கடலோர மக்களின் இடர் தணிப்புத்திட்டத்தின் கீழ் சுமார் ரூ.262.86 கோடி செலவில் கட்டப்படவுள்ளன.

### 1.12.4 2011–ஆம் ஆண்டு மழை விவரம்

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 960 மி.மீ ஆகும். 2011–ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தின்போது 317 மி.மீ மழை பெய்துள்ளது. இது இயல்பான மழையளவான 330.8 மி.மீ–ஐ விட குறைவாகும். தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்கிறது. 2011–ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை 24.10.2011–ல் தொடங்கி 10.01.2012–ல் முடிவடைந்தது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் 557.9 மி.மீ மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவான 468.0 மி.மீ மழையைவிட 19 சதவீதம் கூடுதலாகும். திருப்பூர், தேனி, கரூர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, ஈரோடு, தூத்துக்குடி, காஞ்சிபுரம், சிவகங்கை, கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருச்சி, நாமக்கல், புதுக்கோட்டை, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய 20 மாவட்டங்களில் அதிக அளவு மழை பெய்துள்ளது. கன்னியாகுமரி, திருவள்ளூர், திருவண்ணாமலை,

தருமபுரி, அரியலூர், வேலூர், நீலகிரி, சென்னை, திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இயல்பான மழையும் பெய்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 07.11.2011 அன்று வடகிழக்கு பருவமழை காலத்தை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்கள் துயர் தணிக்க ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகைகளை உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். இதைத் தொடர்ந்து வடகிழக்கு பருவமழையின்போது உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கும், பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்ட குடும்பங்களுக்கும் மற்றும் கால்நடை இழப்புக்கும் கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்க அரசாணை (நிலை) எண். 342, வருவாய் [பே.மே–2] துறை, நாள் 09.11.2011–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை (ரூபாய்) | உயர்த்தப்பட்ட நிவாரணத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | மனித உயிரிழப்பு | ரூ.1,00,000/– | ரூ.2,00,000/– |
| 2. | பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவித் தொகை | உணவு, 10 கிலோ இலவச அரிசி, 1 வேட்டி, 1 சேலை, 1 லிட்டர் மண்ணெண்ணெய் | உணவு, 10 கிலோ இலவச அரிசி, 1 வேட்டி, 1 சேலை, 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் கூடுதலாகரூ.1000/– |
| 3. | **கால்நடை இழப்பு** | | |
| | மாடு ஒன்றுக்கு | ரூ.10,000/– | ரூ.20,000/– |
| | ஆடு ஒன்றுக்கு | ரூ.1,000/– | ரூ.2,000/– |
| | கோழி ஒன்றுக்கு | ரூ.30/– | ரூ.100/– |

## 1.13 'தானே' புயல் 2011

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வந்த காலத்தில் **26.12.2011** அன்று 'தானே' புயல் உருவானதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்ததைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடலோர மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறையினருக்கும் அறிவுறுத்தப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என

அறிவுறுத்தப்பட்டனர். புயலினால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கையாக கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் தணிப்புக் குழு அனுப்பி வைக்கப்பட்டது. 'தானே' புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தலைமைச் செயலாளரால் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடன் 29.12.2011 அன்று செயல்திட்ட கூட்டம் நடத்தப்பட்டது.

தமிழகத்தின் வங்கக்கடலில் மையம் கொண்ட 'தானே' புயல் 30.12.2011 அன்று காலை 6.30 மணிக்கு கடலூர் அருகே கரையைக் கடந்தது. இதன் காரணமாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மரங்கள் அடியோடு சாய்ந்தன. மின்சார கட்டமைப்புகள் முற்றிலும் சேதமடைந்தன. இலட்சக்கணக்கான குடிசை மற்றும் ஓட்டு வீடுகள் மிகுந்த சேதத்திற்குள்ளாயின. விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்கள் குறிப்பாக முந்திரி மரங்கள் பெருமளவில் சேதமடைந்தன. புயல் பாதிப்பை ஆய்வு செய்யும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.12.2011 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகளை

மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.150.00 கோடி விடுவித்து ஆணையிட்டார்கள். இதைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.393, வருவாய் [பே.மே–2] துறை, நாள் 30.12.2011–ல் உடனடி நிவாரணம் மேற்கொள்ள ரூ.150.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 03.01.2012 அன்று பிறப்பித்த ஆணையில் 'தானே' புயலால் ஏற்பட்ட சேதத்தினை சீரமைக்கவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட ரூ.150 கோடியுடன் ரூ.700 கோடியினை சேர்த்து ஆக மொத்தம் ரூ.850 கோடி பின்வரும் இனங்களுக்கு வழங்கி ஆணையிட்டார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | பாதிக்கப்பட்ட குடிசைகள் மற்றும் ஓட்டு வீடுகளுக்கு | ரூ.114 கோடி |
| 2. | பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு | ரூ.50 கோடி |
| 3. | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு | ரூ.300 கோடி |
| 4. | பயிர் சேதங்களுக்கு நிவாரணம் | ரூ.166 கோடி |
| 5. | மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் சேதத்திற்கு | ரூ.20 கோடி |
| 6. | சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பதற்கு | ரூ.150 கோடி |
| 7. | உயிரிழப்பு, கால்நடை இழப்பு, வேட்டி, சேலை, அரிசி, மண்ணெண்ணெய் வழங்க மற்றும் பிற இனங்களுக்கு | ரூ.50 கோடி |

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 04.01.2012 அன்று கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வான்வழியாக பார்வையிட்டு சேதம் குறித்து ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கடலூரில் நிவாரணம் வழங்கினார்.

புயலால் சாய்ந்த மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு சாலைப் போக்குவரத்து 24 மணி நேரத்திற்குள் சீர் செய்யப்பட்டது. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட டேங்கர் லாரிகள் மற்றும் டீசல் ஜெனரேட்டர்கள் மூலம் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

'தானே' புயலால் கடலூர் மாவட்டத்தில் 27 உயர்மின்னழுத்த கோபுரங்கள், 45460 மின் கம்பங்கள் மற்றும் 4700 மின்மாற்றிகள் அடியோடு சாய்ந்தன. எனவே, முற்றிலும் பாதிக்கப்பட்ட மின்சார கட்டமைப்புகளை, கம்பங்களை சீரமைக்க பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் 10,000 தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்கள் கடலூர் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவில்

மின்சார விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட கீழ்கண்ட இனங்களுக்கு கருணைத் தொகை மற்றும் பிற நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.2,00,000 (56 குடும்பங்களுக்கு) | ரூ.112 இலட்சங்கள் |
| கால்நடை இழப்பீடு (401 எண்ணிக்கை) | ரூ.24.31 இலட்சங்கள் |
| சேதமடைந்த குடிசைகள் / ஓட்டு வீடுகள்(577584) | ரூ.16006 இலட்சங்கள் |
| விவசாயிகளுக்கு பயிர் சேதத்திற்கு மானியத்தொகை(2,34,082 ஹெக்டேர்) | ரூ.21468 இலட்சங்கள் |

## 1.13.1 மத்திய குழு வருகை

'தானே' புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ய மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திரு.லோகேஷ் ஜா தலைமையிலான 10 அலுவலர்கள் அடங்கிய மத்திய குழு தமிழகத்திற்கு வருகை புரிந்தது. இக்குழுவினர் 09.01.2012 அன்று கடலூர் மாவட்டத்திலும், 10.01.2012 அன்று விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு சேதம் குறித்து ஆய்வு செய்தனர்.

புயலால் பாதிக்கப்பட்ட பல்வேறு இனங்களுக்கு நிவாரணமாகவும் மற்றும் சேதமடைந்த உள்கட்டமைப்புகளை சீர் செய்ய வேண்டியும் மத்திய அரசிடம் ரூ.5248.80 கோடி நிதியுதவி கோரும் விரிவான கோரிக்கை மனு மத்திய குழுவினரிடம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மத்திய அரசிடமிருந்து இடைக்கால நிவாரணமாக ரூ.500 கோடி மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 1.13.2 பாதிக்கப்பட்ட ஆண்டுப்பயிர்கள் மற்றும் நீண்டகாலப் பயிர்களுக்கான சிறப்புத் தொகுப்பு திட்டம்

04.02.2012–அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின்போது, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வேளாண்பயிர் மற்றும் தோட்டப்பயிர், குறிப்பாக முந்திரி மரங்களை இழந்துள்ள விவசாயிகளுக்கு 790 கோடியே 18 இலட்ச ரூபாய் செலவில் ஒரு சிறப்பு தொகுப்புத் திட்டம் இதற்காக கடலூரில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலரை தலைவராகக் கொண்ட திட்ட மேலாண்மை மையத்தின் மூலம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இந்த சிறப்பு தொகுப்புத் திட்டத்தின்

கீழ் வேளாண்பயிர்களுக்கு 65 கோடியே 22 இலட்ச ரூபாயும், தோட்டக்கலை பயிர்களுக்கு 724 கோடியே 96 இலட்ச ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 'தானே' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் புயல் பாதித்த மாவட்டங்கள் என அறிவிக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண்.46, வருவாய்[பே.மே–II]துறை, நாள் 06.02.2012–ன்படி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை புயல் பாதித்த மாவட்டங்களாக அறிவித்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த அறிவிப்பின் மூலம், விவசாயிகளின் குறுகிய கால கடன் மத்திய கால கடனாகவும், மத்திய கால கடன் நீண்ட கால கடனாகவும் மாற்றப்பட்டு விவசாயிகளுக்கு புதிய பயிர்க் கடன்கள் வழங்கவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

## 1.14 தீ விபத்து நிவாரணம்

தமிழ்நாட்டில் தீ விபத்துக்களினால் சேதமடையும் குடிசைகளுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.6.2011 அன்று அறிவித்ததற்கேற்ப, முழுவதுமாக சேதமடைந்த

குடிசைகளுக்கு ரூ.2000/–லிருந்து ரூ.5000/– ஆகவும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.1000/–லிருந்து ரூ.2500/– ஆகவும், நிவாரண உதவித் தொகையினை உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 10 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணையும் நிவாரணமாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**1.15 மாநில பேரிடர் தணிப்பு நிதி**

பேரிடர் நிவாரண உதவிகள் பொதுவாக மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து (முன்னதாக பேரிடர் நிவாரண நிதி) வழங்கப்படுகிறது. பேரிடர் நிவாரண நிதியின் கீழ் 2010 முதல் 2015 வரையிலான காலத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஒதுக்கீடு ரூபாய் கோடியில் |
|---|---|
| 2010–2011 | 293.52 |
| 2011–2012 | 308.20 |
| 2012–2013 | 323.61 |
| 2013–2014 | 339.79 |
| 2014–2015 | 356.78 |
| மொத்தம் | **1621.90** |

இது தவிர, பதிமூன்றாவது நிதிக்குழு பரிந்துரையின்படி, பேரிடர் மேலாண்மை ஆற்றல் மேம்பாட்டிற்காக **2010–2011** முதல் **2014–2015** வரை ரூ.**25** கோடி (ஆண்டொன்றுக்கு ரூ.**5** கோடி வீதம்) மானியமாக மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.16 சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

**26.12.2004** அன்று ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிவாழ் மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்புடைய அனைத்து துறைகளையும் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டதோடு, கன்னியாகுமரி, நாகப்பட்டினம், கடலூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை, உடனடியாக பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய அரசு, உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பிரதமரின் தேசிய நிவாரண நிதி, தேசிய மற்றும் பன்னாட்டு அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் நிதி உதவியோடு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுவரை ரூ.3865.21 கோடி மதிப்பீட்டிலான பணிகள் மட்டுமே நிறைவு பெற்றுள்ளன. தற்போது உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூ.786.92 கோடி மதிப்பீட்டிலும், சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.355.08 கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ.1142.00 கோடி மதிப்பீட்டிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.16.1 சுனாமி மறுவாழ்த் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், மீன் இறங்கு தளங்கள், சாலைகள் மற்றும் பாலங்கள், ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வீடுகள் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.355.08 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன.

### 1.16.2 உலக வங்கி உதவி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டம்

கடலோர மாவட்டங்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் உலக வங்கியின் உதவியுடன் அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் மே 2005ல் (12.05.2005) கையெழுத்தானது. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.1852.74 கோடி (423

மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும். இத்திட்டத்தின் 5 கூறுகள் பின்வருமாறு:

1. வீடுகள் மீளகட்டுதல் 2. வாழ்வாதாரம் மேம்பாடு 3. பழுது மற்றும் மறுசீரமைப்பு 4. தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி மற்றும் 5. செயலாக்க உதவி.

மேற்கண்ட 5 கூறுகளில் வீடுகளை மீள கட்டுதல் பணிகளுக்கு அதிகபட்சமாக ரூ.1445.40 கோடி (354.20 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஒதுக்கப்பட்டது. ஏனெனில் இக்கூறு சுனாமியினால் அதிகமாக பாதிக்கப்பட்டது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன்வந்து பாதிக்கப்பட்ட இடங்களில் தங்களது நிதியிலிருந்து வீடுகளை கட்டி கொடுத்தமையால், நகர்ப்புறங்களில் மட்டுமே உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவரச சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டன. அதனால் வீடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கணிசமான சேமிப்பு இருந்தது.

இந்த சேமிப்பினை செவ்வனே பயன்படுத்தவும், கடலோரப் பகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தினை குறுகிய கால அடிப்படையில் மேம்படுத்தவும், எதிர்காலங்களில் கடலோரப் பகுதி வாழ் மக்களை புயல், கடல் கொந்தளிப்பு, வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற

இயற்கை பேரிடர்களினால் ஏற்படும் அபாயத்திலிருந்து நீண்ட கால அடிப்படையில் பாதுகாக்கவும் இத்திட்டத்தை திருத்தி அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக திருத்தியமைக்கப்பட்ட அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டத்திற்கான மறு ஒதுக்கீடு ரூ.1959.10 கோடி ஆகும் (415 மில்லியன் அமெரிக்க டாலர்கள்). இந்த திருத்தியமைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் 31.12.2011 வரை நீட்டிக்கப்பட்டது. இந்த திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஊரக பகுதிகளில் அனைத்து இயற்கை பேரிடர்களையும் தாங்கக்கூடிய 14369 வீடுகள் கட்டுதல், 46.01 கி.மீ. பாதுகாப்பு வழித் தடங்கள் அமைத்தல், 439 முன்னெச்சரிக்கை கருவிகள் நிறுவுதல், 121 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் கட்டுதல், மீன்துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், நதிகளில் நிலையான முகத்துவாரங்களை ஏற்படுத்துதல், ஐஸ் குழாய் இயந்திரம் அமைத்தல், சென்னை ஒக்கியம்—துரைப்பாக்கம், அகில இந்திய வானொலி நிலையத்தின் நிலத்தில், திருவொற்றியூர் மற்றும் மெரினாவில் வீடுகள் கட்டுதல், ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைத் திட்டம் (Integrated Coastal Zone Management Plan) தயாரித்தல் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நகராட்சி /

பேரூராட்சி பகுதிகளில் கழிவுநீர் வசதிகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையில் **31.12.2011** உடன் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டம் முடிவுற்றதால், உலக வங்கியின் உதவியுடன் அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு தற்போது நிலுவையில் இருக்கும் பணிகள் மற்றும் இயற்கை பேரிடர்களால் ஏற்படும் அபாயத்தினை குறைத்தல் மற்றும் தணிக்கும் தொடர்புடைய புதிய பணிகளை கொண்டு பேரிடர்களால் ஏற்படும் அபாயத்தினை குறைக்கும் திட்டம் (Disaster Risk Reduction Project) உத்தேசமாக ரூ.**1142.00** கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டு உலக வங்கியின் நிதிஉதவி பெற மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டு மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**நில நிருவாகம்**

மாநில அரசின், நில நிருவாக துறையின் கட்டுப்பாட்டில் அனைத்து அரசு நிலங்களும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நில நிர்வாக ஆணையரின் கீழ் ஒரு கூடுதல் ஆணையர், இரண்டு இணை ஆணையர்கள் மற்றும் ஐந்து உதவி

ஆணையர்கள் தலைமையிடத்தில் பணியாற்றுகின்றனர். நிலங்களை நிர்வகிக்கும் பணி, மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் அலுவலர்களால் செயல்படுத்தப்படுகிறது.

அனைத்து அரசு நிலங்களும் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை, குத்தகை, நில உரிமை மாற்றம், நில மாற்றம், நில எடுப்பு, அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் திரையரங்குச் சட்டம் முதலிய பணிகள் நில நிர்வாகத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

## 2.1 பட்டா மாற்றம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 10.6.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் பட்டா மாறுதல் நிகழ்வுகளில் ஏற்படும் காலதாமதங்களைக் களைவதற்காகவும் வழிமுறைகளை எளிதாக்கி விரைவாகப் பட்டா மாறுதல்கள் மேற்கொள்ளவும் பட்டா மாறுதல் விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் கொண்டு வரப்படும் எனவும், பட்டா மாறுதல் விண்ணப்பங்களை அளிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொதுமக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாதவகையிலும், வருவாய் நிலை ஆணை 31(8)–இல் தக்க மாறுதல் செய்யப்படும் என அறிவித்தார்கள். அதன்

தொடர்ச்சியாக அரசாணை (நிலை) எண்.209, வருவாய்த்துறை, நாள் **08.07.2011–**இன்படி வருவாய் நிலை ஆணை **31–**இல் கிராம நிர்வாக அலுவலர் பட்டா மாற்ற மனுக்களை பெறுவதற்கான திருத்தம் செய்து உத்திரவிடப்பட்டது. அரசாணை (நிலை) எண்.210, வருவாய்த்துறை, நாள் **08.07.2011** வாயிலாக மனுக்களைப் பெறுவதற்கும் அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய வழிமுறைகளை வகுத்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வரசாணைகள் வெளியிடப்பட்டதால் பட்டா மாறுதல் விண்ணப்பங்களின் மீது வட்டாட்சியர் ஆணை பிறப்பித்த பின்னரே மனுதாரர் உட்பிரிவு கட்டணம் செலுத்தினால் போதுமானது. இதனால் பட்டா மாறுதல் தொடர்பாக பொதுமக்கள் சந்தித்துவந்த இடர்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன.

### 2.1.1 அரசாணையின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:-

#### அ) உட்பிரிவிற்கு உட்படாத இனங்கள்

மனுதாரர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் தங்களது கிராம நிர்வாக அலுவலரிடம் பட்டா மாறுதல் கோரும் விண்ணப்பங்களை அளித்து இரண்டாம் வெள்ளிக்கிழமை அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து சம்பந்தப்பட்ட

மண்டல துணை வட்டாட்சியரிடம் உத்தரவினை பெற்றுக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ) உட்பிரிவிற்கு உட்பட்ட இனங்கள்**

உட்பிரிவிற்கு உட்பட்ட இனங்களிலும் மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இருப்பினும், உட்பிரிவிற்குட்பட்ட இனங்களில் வட்டாட்சியர் ஆணை வெளியிட வேண்டியுள்ளதால் மனுதாரர் மனு அளித்த நாளிலிருந்து நான்காவது வெள்ளிக் கிழமை ஆணை பெறுவார். இப்பணி முப்பது நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

வட்டாட்சியரிடமிருந்து பட்டா மாறுதல் ஆணை பெற்றபின் உட்பிரிவிற்கான கட்டணத்தை மனுதாரர் செலுத்தினால் போதுமானது.

ஒவ்வொரு திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க் கிழமைதோறும் மண்டலத் துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் கிராமங்களுக்குச் சென்று பணி தொய்வில்லாமல் நடைபெறுவதை ஆய்வு செய்யப் பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணையின்படி மேற்கொள்ளப்படும் பணிகள், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை மாவட்டவாரியாக நில நிர்வாக ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

**(இ) திட்ட முறை**

1) கிராம நிருவாக அலுவலர்கள் தங்களது கிராமங்களில் திங்கட்கிழமைகளிலும் மற்றும் கூடுதல் பொறுப்பு கிராமத்தில் செவ்வாய்க் கிழமைகளிலும் பொதுமக்களின் விண்ணப்பங்களை பெறுவார்கள்.

2) அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பட்டா மாறுதல் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் நில அளவை அலுவலர்கள் அனைவரும் முழு நேரமும் இந்தப் பணியில் ஈடுபடுவர்.

3) பட்டா மாறுதல் நேர்வுகளை பொறுத்தவரை முன்பு இருந்த நிச்சயமற்ற தன்மையைப் போக்கி, பட்டா மாறுதல் உத்தரவுகளை வழங்க ஒரு காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. **20.03.2012 அன்றுவரை 14.60 லட்சம் பட்டா மாறுதல் உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளன.**

## 2.2 நில ஒப்படை

### 2.2.1 வீட்டுமனை ஒப்படை

வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை 21–இன்கீழ் வரையறைக்குட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. ஆட்சேபகரமான புறம்போக்குகள் மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக்கூடிய நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைக்காக ஒப்படை செய்யப்படுகின்றது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.30,000/–க்கு குறைவாக உள்ள வீடில்லா ஏழை குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு குறைவாக உள்ள வீடில்லா ஏழை குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவில் வீட்டுமனைக்காக நிலம் வழங்கப்படுகின்றது.

**வீட்டுமனை ஒப்படை செய்வதில் கீழ்க்காணும் முன்னுரிமை பின்பற்றப்படுகிறது.**

1. எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்
4. முன்னாள் இராணுவத்தினர்
5. வீடற்ற ஏழை மக்கள்

அரசாணை (நிலை) எண்.248, வருவாய்த்துறை, நாள் 28.07.2009–இன்படி, வீட்டுமனை ஒப்படைக்கென வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | அலுவலர்கள் | நிதி வரம்பு (நில மதிப்பு) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ. 30,000/– வரை |
| 2 | கோட்டாட்சியர் | ரூ. 50,000/– வரை |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை |
| 5 | நில நிருவாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை |
| 6 | அரசு | ரூ.5,00,000/– மேல் |

**16.05.2011** அன்று பொறுப்பேற்ற பின்னர் இந்த ஆண்டில் **(2011–2012) 1,00,000** வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கிட அரசு முடிவு செய்தது. அதன்படி **15.03.2012** வரை **1,18,624** வீட்டுமனைப்பட்டாக்கள் **2011–2012–ம்**

நிதி ஆண்டில் வழங்கி நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைவிட அதிகமாக வழங்கி சாதனை எய்தப்பட்டுள்ளது.

## 2.3 நில எடுப்பு

### 2.3.1 நில எடுப்புச் சட்டம், 1894 (மத்தியச் சட்டம் 1/1894)

பொதுவாக நிலம் கையகப்படுத்தும் பணிக்கு மத்திய சட்டம் 1/1894–ன்படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இச்சட்டத்தின்படி மூன்று வருடங்களுக்குள் சாதாரண நிகழ்வுகளில் நில எடுப்புப் பணி முடிக்கப்படும். அவசர நோக்கத்திற்காக செய்யப்படும் நில எடுப்பு நேர்வுகளில் இச்சட்டப் பிரிவு 17(1) மற்றும் 17(2)–ன்படி 180 நாட்களில் நில எடுப்புப் பணிகள் முடிக்கப்படுகின்றன. நில எடுப்புப் பணிகளில் ஒவ்வொரு நிலைக்குமான கால அளவுகள் திட்ட ஆய்வு உத்தி அட்டவணை (Pert Chart)–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சாலை மேம்பாடு மற்றும் தொழில் சார்ந்த நோக்கங்களுக்காக நில எடுப்பு செய்யப்படும் இனங்களில் நில எடுப்புப் பணிகளை விரைந்து முடிக்கும்பொருட்டு கீழ்க்காணும் சிறப்புச் சட்டங்கள் தமிழக அரசால் இயற்றப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு தொழில் சார்ந்த நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (சட்டம் 10/1999)
2. தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம், 2001 (சட்டம் 34/2002)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டங்களை விரைந்து முடிக்கும்பொருட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் நல நில எடுப்புச் சட்டம், 1978 (சட்டம் 31/1978) தமிழக அரசால் இயற்றப்பட்டுள்ளது.

### 2.3.2 நிதி அதிகார வரம்பு

| வரிசை எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதி வரம்பு |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் / தனி வட்டாட்சியர் | ரூ. 2,50,000/– வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2. | கோட்டாட்சியர் / துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் | ரூ. 2,50,000/– மேல் ரூ. 7,50,000/– வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் முதல் ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை) |
| 3. | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ. 7,50,000/–க்குமேல் ரூ. 50,00,000/– வரை (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேல் ரூபாய் ஐம்பது இலட்சம் வரை) |
| 4. | நில நிருவாக ஆணையர் | ரூ. 50,00,000/–க்கு மேல் (ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேல்) வரம்பின்றி. |

(அரசாணை (நிலை) எண்.12, வருவாய்த் துறை, நாள் 7.01.2011)

நில எடுப்புச் சட்டங்களின் கீழ் நில எடுப்பு செய்யப்படும்போது கால தாமதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், கூடுதல் இழப்பீட்டுத் தொகை கோரி தாக்கல் செய்யப்படும் நில எடுப்பு இனங்களில், நீதிமன்றங்கள் அதிக அளவில் இழப்பீட்டுத் தொகை வழங்கி ஆணை பிறப்பிக்கின்றன. இந்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, அரசாணை (நிலை) எண். 885, வருவாய்த்துறை, நாள் 21.09.1995–ல் தனியார் நிலங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி கிரையம் மூலம் நில எடுப்பு செய்வதற்கு ஏதுவாக மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுக்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண்.103, வருவாய்த்துறை, நாள் 28.02.2011–ன்படி, மேற்படி அமைக்கப்படும் நில எடுப்பு குழுவிற்கு நில உரிமையாளர்களிடம் நேரடி பேச்சு வார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்த நிதி வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. பேச்சு வார்த்தையில் ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை, வழிகாட்டி மதிப்பு / சந்தை மதிப்பில் 150 விழுக்காட்டிற்கு உட்பட்டிருந்தால் அதனை முடிவு செய்ய மாவட்ட அளவிலான

பேச்சுவார்த்தை குழுவுக்கு ரூபாய் ஒரு கோடி வரை அதிகாரம் உள்ளது.

2. தனியார் பேச்சுவார்தையில் ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை, வழிகாட்டி மதிப்பு / சந்தை மதிப்பில் 150 விழுக்காட்டுக்கு உட்பட்டு ரூபாய் ஒரு கோடிக்கு மேல் இருந்தால், அதனை முடிவு செய்ய மாநில அளவிலான பேச்சு வார்த்தை குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
3. தனியார் பேச்சு வார்த்தை மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை சந்தை மதிப்பு / வழிகாட்டி மதிப்பில் 150 விழுக்காட்டுக்கு அதிகமாக இருப்பின், அந்நேர்வு குறித்து அரசின் ஆணைகளைப் பெற்று நிலம் கிரையம் செய்யப்படுகிறது.

### 2.3.3 நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக் கொள்கை

நில எடுப்பினால் பாதிக்கப்படும் ஏழை, எளிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை தவிர அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையிலும், எதிர்கால வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையிலும் ஒரு “நிவாரணம் மற்றும்

மறுவாழ்வுக் கொள்கை”–யினை அரசு வகுத்து வருகிறது.

## 2.4 நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை 23 மற்றும் 23 (அ)–ன்கீழ், மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் முறையே நிலக்கிரையத்துடனும், நிலகிரயமின்றியும் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

மாநில அரசுத் துறைகளான போக்குவரத்துத்துறை, சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளுக்கு நீர்நிலைப் புறம்போக்கு போன்ற தடையாணைக்குட்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர நிலங்களை நிலமதிப்பு வரம்பின்றி வழங்கவும், காவல் நிலையம், காவலர் குடியிருப்பு, காவலர் பயிற்சிமுகாம் மற்றும் மைதானம், போக்குவரத்துத்துறையின் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் போன்ற மற்ற அரசுத்துறையின் தேவைகளுக்கும் தேவையான குறைந்தபட்ச நிலத்தினை வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படும் நிலங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டனவோ, அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அரசு நிலங்களுக்கு வருவாய்த்துறையே

பாதுகாவலராக உள்ளபடியால், பயன்படுத்தப்படாத நில மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைத் திரும்பப் பெறும் அதிகாரம் அரசின் வருவாய்த்துறைக்கே உள்ளது.

நிலமாற்ற இனங்களில், மேய்க்கால் (அல்லது) மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் உட்படுகையில், நில மாற்றம் செய்யப்படும் பரப்புக்கு ஈடான மாற்று நிலம் கண்டறியப்பட வேண்டும். அந்த மாற்று நிலத்தை மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுக் கட்டணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,000/– வீதம் உள்ளாட்சி அமைப்புக்கு கேட்பு நிறுவனம் செலுத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்பு மேற்படி மாற்று நிலத்தை மேம்படுத்தி உள்ளூர் கால்நடைகள் மேய்வதற்கு அனுமதிக்க வேண்டும். மேற்படி மாற்று நிலம் உள்ளூர் கால்நடைகள் மேய்வதற்கு மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும். அதன் உரிமையோ வருவாய்த்துறையிடமே இருக்கும்.

## 2.5 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை 24–இன் கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக, உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசு நிறுவனங்கள்/ கழகங்கள் / வாரியங்கள் / பல்கலைக் கழகங்கள் / தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் / பி.எஸ்.என்.எல். / தனியார்

நிறுவனங்கள் போன்றவற்றிற்கு கொடையாகவோ அல்லது சலுகை விலை அடிப்படையிலோ அல்லது முழு நிலக்கிரையத்தை வசூலித்துக் கொண்டோ நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. நில உரிமை மாற்றம் குறித்த நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்படுமானால், நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படாமல் அரசால் மீளப்பெறப்படுகின்றன.

பொது நலன் கருதி குடிநீர் திட்டப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் போன்றவற்றிற்கு அரசு நிலங்கள் நிலக்கிரையமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நிலங்கள் இலவசமாகவும், வாரியத்திற்குத் தேவையான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் இதர கட்டடங்கள் கட்டுவதற்காக நிலம் தேவைப்படின் பெயரளவு நிலக்கிரையத் தொகையாக மனை ஒன்றுக்கு ரூ.5,000/. வசூலித்துக் கொண்டும் அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

சிட்கோ / சிப்காட் / டிட்கோ / எல்காட் / தமிழ்நாடு மின்சார வாரியம் / தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் / நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் போன்றவற்றிற்கு ஒரு மடங்கு நிலக்கிரையத்தை வசூலித்துக் கொண்டு சில நிபந்தனைகளின் பேரில் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

**2.6 நிலக்குத்தகை**

அரசுக்குச் சொந்தமான நிலங்கள், வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், நம்பகங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு வருவாய் நிலையாணை 24அ–இன்கீழ் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக 20 ஆண்டுகளுக்கும் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி ஆண்டு ஒன்றுக்கு வணிகமற்ற நோக்கத்திற்கு நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடும் குத்தகைக் கட்டணமாக விதிக்கப்படுகிறது.

ஆண்டு குத்தகைக் கட்டணம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யக்கூடியது. இருப்பினும்

சில சிறப்பு நேர்வுகளில் பொது நலன் கருதி பெயரளவு ஆண்டு குத்தகையும், நீண்டகாலக் குத்தகையும் அரசால் வழங்கப்படுகிறது.

### 2.6.1 குத்தகை வழங்குவதற்கான அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| அலுவலர் | நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பு (ரூ.) |
|---|---|
| வட்டாட்சியர் | – |
| கோட்ட ஆட்சித் தலைவர் | ரூ.20,000/– வரை |
| மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/– வரை |
| நில நிர்வாக ஆணையர் | ரூ.2,00,000/– வரை |
| அரசு | ரூ.2,00,000/–க்கு மேல் |

(அரசாணை (நிலை) எண்.60, வருவாய்த்துறை, நாள் 06.02.1999)

### 2.7 உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

வருவாய் நிலை ஆணை 24அ–ன்படி உப்பள நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் உப்பள குத்தகைத் தொகை கீழ்கண்டவாறு வசூலிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | குத்தகைத் தொகை | ரூ.5/— வீதம் | ஒரு ஏக்கருக்கு ஒரு வருடத்திற்கு |
| 2 | உரிமத் தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/— வீதம் | குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு ரூ.100/— |
| 3 | தலவரி 100% | ரூ.5/— | ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 4 | தல மேல் வரி 500% | ரூ.25/— | ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| | **மொத்தம்** | **ரூ.135/—** | **ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு** |

இந்தக் குத்தகைத் தொகை பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறு உப்பளங்களுக்கென குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களின் பரப்பளவு 27,777 ஏக்கராகும்.

## 2.8 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களின் மீதுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் என்பது வருவாய்த்துறைக்கு ஒரு தலையாய கடமையாகும். அரசு நிலங்களில் இருந்து ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற கீழ்க்காணும் சட்டங்கள் வழி வகுக்கின்றன.

1. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920
3. தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007
4. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001
5. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994
6. தமிழ்நாடு பொதுக் கட்டடம் (அனுமதிக்கப்படாத ஆக்கிரமிப்பு) சட்டம், 1975
7. தமிழ்நாடு ஊராட்சி சட்டம், 1958

அரசாணை (நிலை) எண்.41, வருவாய்த்துறை, நாள் 20.01.1987–இல் நீர்நிலை ஆதாரங்களான குளம், குட்டை, ஓடை, கால்வாய் மற்றும் நீர்ப்பிடிப்பு போன்ற நீர்நிலைகளைப் பாதுகாக்கவும், அவற்றில் ஆக்கிரமிப்புகளைத் தவிர்க்கும் வகையில் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த தடையாணையும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை வழுவாது கடைபிடிக்குமாறு அரசாணை (நிலை) எண்.186, வருவாய்த்துறை, நாள் 29.04.2003–இல் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.20186/2000–இல் வெளியிட்ட தீர்ப்பில், மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் உள்ள சட்ட

விரோதமான ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதனை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப்பணித்துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், கண்காணிக்கவும் மாவட்ட அளவில் குழுவும் (Steering Committee) மற்றும் அரசளவில் உயர்மட்டக்குழுவும் (High Level Committee) அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஒரு திட்டத்தை வகுத்து செயல்படுத்த உச்சநீதி மன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு எண்.3109/2011–இல் தாக்கல் செய்யப்பட்டு சிவில் முறையீடு எண்.1132/2011–இல் வழங்கிய உத்திரவிற்கிணங்க கிராமப் பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள

புறம்போக்கு நிலங்களின் மீதான ஆக்கிரமிப்புகளை அகற்றி சமுதாயப் பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு திட்டம் ஒன்றை வகுத்து செயல்படுத்திட அவசியமாகிறது.

அரசு நிலங்களில் ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதாக கண்டறியப் பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | வகைபாடு விவரம் | கண்டறியப்பட்ட மொத்த ஆக்கிரமிப்புகள் 01.04.2011 அன்றைய நிலவரப்படி | | அகற்றப்பட்ட ஆக்கிரமணங்களின் விவரம் 29.02.2012 முடிய | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பரப்பு (ஏக்கரில்) | எண்ணிக்கை | பரப்பு (ஏக்கரில்) |
| 1 | நீர்நிலை புறம்போக்கு | 299140 | 58820 | 13333 | 4605.24 |
| 2 | மயானம், மந்தைவெளி, மேய்க்கால் | 79159 | 30342 | 9247 | 4925.00 |
| 3 | வனம் (காடு) | 21691 | 28603 | 485 | 73.38 |
| 4 | சாலை / பாதை முதலியன | 68072 | 6333 | 21046 | 587.52 |
| 5 | கோயில், வக்ப்போர்டு மற்றும் மதம் சார்ந்த இடங்கள் | 6830 | 1766 | 874 | 260.01 |
| 6 | உள்ளாட்சிக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலங்கள் | 63562 | 13316 | 18081 | 2351.56 |
| 7 | இதர இனங்கள் (களம், கல்லாங்குத்து, சாவடி, தோப்பு முதலியன) | 98274 | 41979 | 9072 | 5421.24 |
| | மொத்தம் | **658595** | **184148** | **72318** | **18223.98** |

## 2.9 சிறுபாசனக் கணக்கெடுப்பு புள்ளி விவர பகுத்தாய்வு விவரம் (ஆர்.எம்.ஐ.எஸ்)

சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன் சிறுபாசனப் புள்ளி விவர சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கணக்கெடுப்பின் ஒருங்கிணைப்பு தலைவராக நில நிர்வாக ஆணையர் செயல்படுவார் என தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

சிறுபாசனக் கணக்கெடுப்புத் திட்டம் கீழக்காணும் நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

1. ஒவ்வொரு ஐந்தாண்டும் சிறுபாசனக் கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சிறுபாசனத் திட்டங்களும் கணக்கெடுக்கப்படுகின்றன.
2. மத்திய அரசிடமிருந்து நான்காவது சிறுபாசனக் கணக்கெடுப்பு இறுதி அறிக்கை பெறப்பட்டவுடன் வேளாண் புள்ளி விவரங்களில் கண்டறியப்பட்ட நீர்பாய்ச்சப்பட்ட பரப்பிற்கும் அரசிடமிருந்து பெறப்படும் காலமுறை முன்னேற்ற அறிக்கைக்கும் உள்ள வேறுபாடுகளைக் களைதல்.
3. சிறுபாசனத் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரத் தொகுப்பினை பகுத்தாய்வு செய்து காலமுறை

மற்றும் ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசிற்கு அனுப்புதல்.

**2.9.1 நான்காவது சிறுபாசன கணக்கெடுப்பு (2006–2007)**

நான்காவது சிறுபாசனக் கணக்கெடுப்பு 2006–2007–ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின்போது நிலத்தடி நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர்மேற்பரப்பு பாசனத்திட்டங்கள் ஆகியவை கணக்கு எடுக்கப் பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

**சிறுபாசனத் திட்டம்வாரியான புள்ளி விவரம்**

| வரிசை எண் | திட்டத்தின் வகை | திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த திட்டங்களின்படி விழுக்காடு |
|---|---|---|---|
| | **நிலத்தடி நீர்த்திட்டம்** | | |
| 1 | தோண்டப்பட்ட கிணறு | 1589216 | 83.10 |
| 2 | ஆழம் குறைவான குழாய் கிணறு | 116479 | 6.09 |
| 3 | ஆழ்துளை குழாய் கிணறு | 160607 | 8.40 |
| | **மேற்பரப்பு நீர்பாசனத் திட்டம்** | | |
| 4 | நீர் மேற்பரப்பு பாசனத் திட்டம் | 38969 | 2.04 |
| 5 | நீர்ஏற்றுப் பாசனத்திட்டம் | 6999 | 0.37 |
| | மொத்தம் | 1912270 | 100.00 |

### 2.9.2 ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2011–12)

மத்திய அரசு ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பினை 100 விழுக்காடுகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் 2011-2012-ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாக கொண்டு 2012-13–ம் நிதியாண்டில் நடத்த திட்டமிட்டுள்ளது.

### 2.10 தமிழ்நாடு திரையரங்கு (ஒழுங்குமுறை) சட்டம், 1955 மற்றும் விதிகள், 1957

மத்திய அரசின் திரையரங்குச் சட்டம், 1952 (மத்திய சட்டம் XXXVII/1952) திரையரங்குகளில் திரைப்படம் வெளியிடுவதற்கு ஒருசில ஒழுங்குமுறை வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குச் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் விதிகள் 1957ல் திரையரங்கு நடத்த ‘சி’ உரிமம் வழங்குவது மற்றும் திரைப்படங்கள் வெளியிடுவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமம் வழங்கும் அலுவலராகவும், சென்னையில் மட்டும் காவல்துறை ஆணையர் நிலையில் திரையரங்குகளுக்கு ‘சி’ உரிமம் வழங்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள திரையரங்குகள் கீழ்காணும் நான்கு வகைபாடுகளாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன :-

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 992 |
| 2. | பகுதித் திரையரங்குகள் | 41 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 20 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 3 |
| | மொத்தம் | 1056 |

## நிலச்சீர்திருத்தம்

### 3.1 நில உச்சவரம்பு

நில உடமைகள் ஒருசிலரிடம் குவிந்து கிடப்பதை பரவலாக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 39–இன் உட்பிரிவு (b) மற்றும் (c)–இன்படி தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நிலஉச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஒரு சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் ஒரு முக்கிய ஆதாரம் என்பதால், விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் வகையில், விவசாய

நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்புக்கு மேல் உள்ள மிகை நிலங்களை கையகப்படுத்தி அதனை நிலமற்ற ஏழைகளுக்கு பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

## 3.2 உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம், **1961** அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு நில உச்சவரம்பு கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **இனம்** | **அனுமதிக்கப்பட்ட நிலப்பரப்பு** |
|---|---|---|
| **1.** | *குடும்பம்*<br>ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு (தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனம் உட்பட) | 15 தர ஏக்கர் |
| | i) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | ii) மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |
| | இதைத் தவிர சீதன நிலமாக 10 தர ஏக்கர், குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினர் பெயரில் வைத்துக் கொள்ளலாம் | |

2. பொது அறக்கட்டளைகள் (Public Trusts)

| | | |
|---|---|---|
| அ) | 01.03.1972 சட்ட திருத்தத்தின்படி தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable nature) : | 5 தர ஏக்கர் |
| ஆ) | 01.03.1972 சட்ட திருத்தத்திற்குப் பிறகு எந்த ஒரு பொது அறக்கட்டளையும் விவசாய நிலங்களை வாங்க வழிவகை இல்லை. இருப்பினும் கைவசமுள்ள நிலங்களுக்கு அனுமதி பெறவேண்டும். | |
| இ) | 01.03.1972 தேதிக்குமுன் இருந்த **மத சார்பான பொது அறக்கட்டளை** (Religious Trust of Public Nature) நில உச்சவரம்பு சட்டத்திற்குள் வராது. | |

## 3.3 உபரிநிலங்கள் மற்றும் பங்கீடு

**29.02.2012** தேதியின்படி மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் விவரம், அதில் ஒப்படை செய்யப்பட்டது மற்றும் நீதிமன்ற வழக்குகளில் நிலுவையில் உள்ள நிலப்பரப்பு ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு

| **வ. எண்** | **விவரம்** | **பரப்பு (ஏக்கரில்)** |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு | 2,08,442 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 1,90,107 |
| 3. | **1965** ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி **13–**இன் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 10,205 |
| 4. | ஒப்படைசெய்யப்பட்ட நிலங்களில் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளவை | 8,130 |

உபரி நிலம் ஒப்படை பெற்ற பயனாளிகளின் விவரம்

| பயனடைந்தோர் (இனவாரியாக) | நபர்களின் எண்ணிக்கை | நில ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர்கள் | **66,429** | **71,277** |
| பழங்குடியினர்கள் | **240** | **322** |
| மற்றவர்கள் | **83,894** | **1,18,508** |
| **மொத்தம்** | **1,50,563** | **1,90,107** |
| பொதுநோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் | | **10,205** |
| **மொத்தம்** | | **2,00,312** |

**3.3.1 உபரிநிலம் ஒப்படை – சரியாக உட்பிரிவு செய்து 'எப்' பட்டா வழங்குதல்**

**2011–2012–**ஆம் ஆண்டைய சட்டமன்ற வரவு செலவு கூட்டத்தொடரில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்மாபட்டி கிராமத்தில் நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உபரியாக அறிவிக்கப்பட்ட சுமார் **3000** ஏக்கர் நிலங்களை சரியாக நிலஅளவை செய்து தகுதியுள்ள பயனாளிகளுக்கு பகிர்ந்தளித்து ஒப்படை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, மேற்படி நிலங்களை அளந்து பயனாளிகளுக்கு ஒப்புவிப்பு செய்யும் பொருட்டு **14** நபர்கள் கொண்ட நில அளவை குழுவினை ஏற்படுத்தி பெரியம்மாபட்டி கிராமத்தில் உள்ள **1178.25** ஏக்கர் சிறு சுற்றுப் புல நிலங்கள் நில அளவை மற்றும் உட்பிரிவு செய்யும் பணி **11.08.2011** முதல் தொடங்கப்பட்டு **20.12.2011** அன்று முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பெரியம்மாபட்டி கிராமத்தில் **1508.24** ஏக்கர் (உபரி நிலம் **1060.63** ஏக்கர்) பரப்புள்ள நிலங்கள் மற்ற சிறு சுற்றுப் புலங்களில் அடங்கியுள்ளன. எனவே, இந்த நிலங்களையும் நில அளவை செய்ய **15** நபர்கள் கொண்ட நில அளவை குழு ஏற்படுத்தப்பட்டு **07.02.2012** முதல் நில அளவை பணி துவங்கப்பட்டது.

இந்நில அளவை மற்றும் உட்பிரிவு செய்யும் பணி திட்டமிட்டபடி **30.04.2012** தேதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஒப்படைதாரர்களையும், அனுபவத்தில் இருப்பவர்களையும் விசாரணை செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாறான இனங்கள் மாநிலத்தில் வேறு இடங்களிலும் உள்ளனவா என்பதை கண்டறிந்து அவ்வாறான இனங்களை ஒப்படைதாரர்களுக்கு அளந்து உட்பிரிவு செய்து ஒப்புவிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.4 தொழில் / வணிக நிறுவனங்களுக்குச் சலுகை

தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு **37–ஏ–**இன் கீழ் அரசால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ **180** நாட்களுக்குள் அரசுக்கு மனு செய்ய வேண்டும்.

### 3.4.1 பொது அறக்கட்டளைகளுக்குச் சலுகை

பொது அறக்கட்டளைகள் கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வைத்துக்கொள்ள சட்டப்பிரிவு **37–பி–இன்** கீழ் அரசால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்கீழ், திருத்தம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தோ அல்லது பொது அறக்கட்டளை நிலத்தை வாங்கிய நாளிலிருந்தோ **180** நாட்களுக்குள் அரசுக்கு மனு செய்ய வேண்டும்.

### 3.5 வருவாய் நீதிமன்றங்கள்

குத்தகைச் சட்டங்களின் வழக்குகளை விசாரிப்பதற்கு தற்போது மாநிலத்தில் **6** (ஆறு) வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித்துணை ஆட்சியர்களின் கட்டுப்பாட்டிற்குள் செயல்பட்டு வருகின்றன.

### 3.5.1 குத்தகைச் சட்டங்கள்

#### (அ) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)

இச்சட்டம், நிலஉடமையாளருக்கு குத்தகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது

அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், நிலத்தில் பயிர் விளைவிக்காமல் இருத்தல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத பிற காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நிலஉரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து பாதுகாப்பு அளிக்கிறது. நில உடைமைதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களிடையே ஏற்படும் தகராறுகள் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **1590** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **29.02.2012** வரை **185** வழக்குகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி காலத்தில் **669** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. **29.02.2012** அன்று மீதமுள்ள **1106** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### (ஆ) தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)

இச்சட்டம், மொத்த விளைச்சலில் **25** விழுக்காடு மட்டும் நிலஉரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகை–தாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையாக நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையை

பணமாகவோ அல்லது விளை பொருளாகவோ செலுத்தலாம். ஆனால் நில உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய நிலவரி தவிர, பயிரிடுவதற்கான மற்ற செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிலஉடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இடையே ஏற்படும் தகராறுகள் அனைத்தும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் **01.06.2011** அன்று **289** வழக்குகள் நிலுவையில் இருந்தன. **29.02.2012** வரை **262** வழக்குகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி காலத்தில் **222** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. **29.2.2012** அன்று மீதமுள்ள **329** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### (இ) தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)

தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி **01.03.1972** தேதிக்கு முன் இருந்த மத சார்பான அறக்கட்டளைகளுக்கு (Religious Trusts of Public Nature) நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்படி அறக்கட்டளைகள்

தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக்கொள்ளவும், அதற்கு மேலுள்ள விவசாய நிலத்தை கட்டாயமாக பிறருக்கு குத்தகைக்குவிட வேண்டும். இச்சட்டம் பொதுஅறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரைமுறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள் மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் 01.06.2011 அன்று 7630 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 29.2.2012 வரை 2706 வழக்குகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி காலத்தில் 2638 வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. 29.2.2012 அன்று மீதமுள்ள 7698 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**(ஈ) தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தின்படி பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாக செயல்படுவர். இதுவரை

இத்திட்டத்தின் கீழ் **2,59,615** நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**(உ) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில் குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, அனுபவித்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களும் மேற்கண்ட பலன்களைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. **29.02.2012** வரையில் உடைமை உரிமை வழங்கப் பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் கீழ்வருமாறு:—

| வரிசை எண். | இனம் | அனுபோகதாரர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| **1.** | ஆதிதிராவிடர்கள் | **1,01,333** |
| **2.** | பழங்குடியினர்கள் | **2,746** |
| **3.** | மற்றவர்கள் | **80,701** |
| | **மொத்தம்** | **1,84,780** |

**(ஊ) வருவாய் நீதிமன்றங்களில் முடிவுசெய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விபரம்**

அனைத்து வருவாய் நீதிமன்றங்களில் குத்தகைச் சட்டங்கள் அனைத்திலும் **9806** வழக்குகள் **31.05.2011** அன்று நிலுவையில் இருந்தன. மானியக் கோரிக்கை **2011–2012**ல் புதிய அறிவிப்புகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நிலுவையில் உள்ள வழக்குகள் **238%** அதிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளன. **01.06.2011** முதல் **29.02.2012** முடிய **3705** வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், **01.09.2010** முதல் **31.05.2011** முடிய உள்ள காலத்தில் **1557** வழக்குகளே முடிவு செய்யப்பட்டன. சராசரியாக முன்னர் ஒரு மாதத்திற்கு **194** வழக்குகள் முடிவு செய்யப்பட்ட நிலையில், தற்பொழுது **411** வழக்குகள் ஒரு மாதத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளன.

**01.06.2011** முதல் **29.02.2012** முடிய உள்ள காலத்தில் **3318** வழக்குகள் வரப்பெற்று **29.02.2012** அன்று **9419** வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**(எ) தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969**

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு

பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்காக நியாய ஊதியம் வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பின்பற்றப்பட்டு வருகிறது.

**3.6 நிலச்சீர்திருத்த ஆவணங்களை கணினிமயமாக்குதல்**

ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் அவர்களது நிலம் சம்பந்தமான ஆவணங்களை கணினிமூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. நில அளவை ஆவணங்களை கணினிமயமாக்கும் பணிகள் கொலாப் லேண்ட் [Collabland] திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நில ஆவணங்கள் மின்அஞ்சல் மூலமாக பொதுமக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், நிலச்சீர்திருத்தம் மற்றும் பூமிதான நிலங்கள், சட்டப்பிரிவு 37–ஏ மற்றும் 37–பி–இன் கீழ் வரும் நிலங்கள் மேற்கண்ட திட்டத்தில் இணைக்கப்படவில்லை.

உபரிநில ஒப்படைதாரர்கள் மற்றும் பூமிதான நிலவிநியோகம் பெற்றவர்கள் விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், 2,00,000 ஏக்கர் உபரி நிலத்தின் தற்கால நிலையையும், 28,000 ஏக்கர் பூமிதான நிலத்தின் தற்கால நிலையையும் அறிந்து கொள்ளவும், இது சம்பந்தமான நில ஆவணங்களை நிரந்தரமாக

பாதுகாக்கவும், நிலச்சீர்திருத்த துறையினை கணினிமயமாக்கி இதனை வருவாய் நிர்வாகத்துடன் இணைத்து தற்போது நடைமுறையிலுள்ள நில ஆவண கணினிமயமாக்கும் பணியில் சேர்க்க 2012–2013 ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.7 பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் துவக்கப்பட்டது. ஆச்சார்ய விநோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் **13.03.1956** முதல் **18.04.1957** வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து பூமிதானத்திற்கு நிலங்களை தானமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட தானத்தை முறைப்படுத்தி நில உடைமையை பூமிதான வாரியத்தின் பெயரில் மாற்றி அதனை நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கவும், **"தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958"** இயற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து விதிமுறைகளும் இயற்றப்பட்டன.

அரசாணை (நிலை) எண்.493, வருவாய் [நி.சீ.1(1)] துறை, நாள் 23.12.2009–இன்படி மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டும் மற்றும் 14 அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக்

கொண்டும் பூமிதான வாரியம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

பூமிதான வாரியத்திற்கு **28,036.28** ஏக்கர் நிலங்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இவைகளில் **20,492.57** ஏக்கர் நிலங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்கள் **7,543.71** ஏக்கர், வழக்கு, பத்திரப்பதிவு, உறுதியாக்கம் முதலானவைகளின் கீழ் உள்ளன.

## 3.8 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011

அரசாணை (நிலை) எண்.265, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் **10.09.2011**–ன்படி, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் **2006**க்குப் பதிலாக "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

1) கல்வி உதவித் தொகை
2) உறுப்பினர் மற்றும் உறுப்பினரின் குழந்தைகளுக்கான திருமண உதவித்தொகை
3) முதியோர் ஓய்வூதியம்
4) விபத்து நிவாரணம்
5) இயற்கை மரண உதவித்தொகை
6) ஈமச் சடங்கு செலவு

### 3.8.1 சிறப்பு அம்சங்கள்

1. கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் சம உரிமை வழங்கும் வகையில், அவர்கள் விவசாய தொழில் செய்பவராக இருந்தால் அவர்கள் இருவருக்கும் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும்.
2. இந்த திட்டத்தின்கீழ் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு பண்பேறிய சிவப்புநிற (Maroon colour) அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிற (Grey Colour) அடையாள அட்டை வழங்கப்படுகிறது. குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பதிவுபெற்ற உறுப்பினருக்கும் அடையாள அட்டை வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இது, தனி அடையாள எண். (Unique Identity Number) வழங்கும்பொழுது அதனுடன் இணைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.
3. முன்னர் பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்ததிலிருந்து மாறுபட்டு, இத்திட்டம் நிலச்சீர்திருத்தத் துறை மூலம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலச்சீர்திருத்த இயக்குநர் இதன் ஒருங்கிணைப்பு அலுவலராகச் செயல்படுவார்.

4. இத்திட்டத்தில், விபத்து நிவாரணத்தின்கீழ் பக்கவாத நோய் சேர்க்கப்பட்டு, அதற்கு நிவாரணமாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.
5. ஈமச்சடங்கு செலவிற்கான தொகை ரூ.2,500 பெறுவதற்கு இறப்பு சான்று எதுவும் தேவையில்லை. எனவே இத்தொகையினை உடனடியாகப் பெறலாம்.
6. திருமண உதவித்தொகை முந்தைய திட்டத்தில் ஆணுக்கு ரூ.3,000/– என்றிருந்ததை ரூ.8,000/– ஆகவும், பெண்ணுக்கு ரூ.5,000/– என்றிருந்ததை ரூ.10,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.
7. முதியோர் உதவித்தொகையும் ரூ.500/– லிருந்து ரூ.1000–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
8. கவின்கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் ஆகிய படிப்புகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

9. கல்விக்கான உதவித்தொகை பிற திட்டங்களிலிருந்து பெறப்பட்டாலும் இத்திட்டத்தின்கீழும் பயன்பெறலாம்.

10. உள்ளூர் மீன்பிடிப்புத் தொழில், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களில் ஒன்றாக இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

12. இரட்டிப்பு பயன்கள் பெறுவதைத் தவிர்க்கும்பொருட்டு, நலிவடைந்த விவசாயத் தொழிலாளர் ஓய்வூதியத்திட்டம், 1981–இன் கீழ் ஓய்வூதியம் பெறும் நலிவடைந்த விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

13. பதிவுபெற்ற உறுப்பினர்கள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மகப்பேறு உதவித்தொகை மற்றும் சமூக நலத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திருமண உதவித் தொகை பெறுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

முந்தைய திட்டத்தின் கீழ் மீதியாக இருந்த தொகையிலிருந்து ரூ. 92.57 கோடி 01.04.2011 முதல்

**10.09.2011** வரை **1,63,370** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. **2011–2012**ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி ரூ.**261.32** கோடி புதிய திட்டமான முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **10.09.2011** முதல் **29.02.2012** வரை **101.71** கோடி ரூபாய், **1,71,230** பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிதியுதவி விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1. | உறுப்பினர்கள் திருமணம் | 0.38 |
| 2. | உறுப்பினரின் குழந்தைகள் திருமணம் | 8.30 |
| 3. | கல்வி உதவி | 6.21 |
| 4. | முதியோர் ஓய்வூதியம் | 52.03 |
| 5. | இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு | 25.40 |
| 6. | விபத்து நிவாரணம் | 9.39 |
| | மொத்தம் | **101.71** |

**01.06.2011** முதல் **29.02.2012** முடிய மொத்த செலவினம் ரூ.**182.07** கோடி ஆகும். இதில் **2,16,272** பயனாளிகள் அடங்குவர்.

## நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

### 4.1 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978

ஒரு சில தனிநபர்களின் கைப்பற்றில் விவசாயமல்லாத நிலங்கள் குவிந்து கிடப்பதை சமமாக பகிர்ந்தளிக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற நில

(உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. இதனை நிறைவேற்றும் நோக்குடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் காலி நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978–ன் படி, ஒவ்வொரு நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் உள்ள தனி நபர், குடும்பம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகியவற்றிற்குத் தகுதியான உச்சவரம்பு விபரம் வருமாறு

| வ.எண் | நகர்ப்புற கூட்டுப்பகுதி | தனிநபர் ச.மீ | குடும்பம் ச.மீ | தொழில் நிறுவனம் ச.மீ |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 500 | 2000 | 2000 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி (ம) சேலம் | 1500 | 3000 | 3000 |
| 3. | திருநெல்வேலி | 2000 | 4000 | 4000 |

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவு சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)ன் மூலமாக 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்

கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு, நீக்கறவு சட்டம் அமலுக்கு வந்த தேதியில் அரசு வசம் உள்ள நிலங்களுக்கு நீக்கறவு சட்டம் பொருந்தாது.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978–ன் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் நிலை கீழ் வருமாறு

| வ. எண் | விவரம் | சதுர மீட்டரில் |
|---|---|---|
| 1. | அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்த பரப்பு | 43,51,756 |
| 2. | நீதிமன்ற வழக்குகளில் உள்ள பரப்பு | 26,70,730 |
| 3. | அறியாமல் கிரயம் பெற்ற நபர்களின் கைப்பற்றில் உள்ள பரப்பு | 23,31,760 |
| 4. | ஆக்கிரமிப்பில் உள்ள பரப்பு (நில உரிமையாளர்கள் மற்றும் உரிமையற்ற ஏனையோர்) | 72,69,355 |
| 5. | ஆக்கிரமிப்பு இல்லாத காலிப்பரப்பளவு நிலம் | 23,55,845 |
| | மொத்த நிலம் | 1,89,79,446 |

## 4.2 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 திருத்தச் சட்டம் 1991

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1.7.1963–இல் விவசாயம் அல்லாத நகர்ப்புற நிலங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் ஒரு சில நில உடமையாளர் வசம் குவிந்துகிடப்பதை தடுக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் முதலில் சென்னை

நகருக்கு மட்டுமே அமலாக்கப்பட்டது. திருச்சி, மதுரை, சேலம் (மற்றும்) கோயம்புத்துார் ஆகிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர் பகுதிகள், திருநெல்வேலி மாநகராட்சி பகுதி, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், நாமக்கல், மேட்டூர், ஈரோடு, திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், துாத்துக்குடி, இராஜபாளையம், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய **23** நகராட்சிகளும் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

அனைத்துப் பகுதிகளுக்கும் **01.07.1981**–ஆம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு **01.07.1991** முதல் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. வரிவிதிப்பு விகிதங்கள் பின்வருமாறு

| வ. எண் | சென்னை மற்றும் ஏனைய நகர்ப்பகுதிகள் | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | 2 கிரவுண்டுக்குள் | வரி இல்லை | 3 கிரவுண்டுக்குள் | வரி இல்லை |
| 2 | 2 கிரவுண்டுக்கு மேல் 5 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 3 கிரவுண்டுக்கு மேல் 7 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 5 கிரவுண்டுக்கு மேல் 10 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 7 கிரவுண்டுக்கு மேல் 10 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4 | 10 கிரவுண்டுக்கு மேல் 20 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 10 கிரவுண்டுக்கு மேல் 20 கிரவுண்டுக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5 | 20 கிரவுண்டுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 20 கிரவுண்டுக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

இந்த சட்டத்தின் பிரிவு 29–இன் கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன.

(i) மத்திய மாநில அரசு நிலங்கள்

(ii) பொது வழிப்பாட்டுக்கான நிலங்கள்

(iii) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்

(iv) மயானபூமி நிலங்கள்

(v) சாலைகளாக பயன்படும் நிலங்கள்

(vi) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூாரி, பல்கலைக்கழக நிலங்கள்

(vii) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்

(viii) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமையப்பெற்ற நிலங்கள்

தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு இன்னல் இருப்பின், பிரிவு **27(1)–** இன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

கீழ்கண்ட அமைப்புகளுக்கும் அரசு வரிச்சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீத சலுகை. மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீத சலுகை

(ஆ) சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீத சலுகை

(இ) திரையரங்குகளுக்கு 10 சதவீத சலுகை

(ஈ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச்சலுகை

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து, அது நிலத்தின் உரிமையாளரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் தள்ளுபடி தரப்படுகிறது

நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது.

## நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம்

நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையானது (SLRD) வருவாய்த் துறையின் கீழ் இயங்கி வரும் பழமை வாய்ந்த துறைகளுள் ஒன்றாகும். இத்துறை நத்தம் நில அளவை, நகர நில அளவை மற்றும் மறு நில அளவை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 5.1 அமைப்பு நிலை

நில அளவை மற்றும் நிலவரி திட்டத் துறையின் அமைப்பு நிலை கீழ்கண்டவாறு அமைந்துள்ளது.

| வ. எண். | பதவி நிலை | அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | துறைத் தலைமை | நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் |
| 2. | இரண்டாம் நிலை அலுவலர் (நிலஅளவை தொடர்பானவை) | நிலஅளவைப் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர் |
| 3. | மத்திய நிலஅளவை அலுவலகம் | நிலஅளவை இணை இயக்குநர் |
| 4. | மண்டல அளவில் | நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை மண்டல துணை இயக்குநர்கள், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை |
| 5. | மாவட்ட அளவில் | அனைத்து மாவட்டங்களிலும் நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர்கள் |
| 6. | வட்ட அளவில் | அனைத்து வட்டங்களிலும் நிலஅளவைப் பிரிவிற்கான நிலஅளவை துணை ஆய்வாளர் |

## 5.2 பொறுப்புகளும் கடமைகளும்

இத்துறை கீழ்க்கண்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) நிலங்களை அளவை செய்தல், நிலஅளவுகளை பதிவு செய்தல், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆவணங்களை தயாரித்தல், நிலவரைபடங்களை தயாரித்தல் போன்ற இதர பணிகள்.

(ii) வட்ட அளவில் நில உரிமை மாற்றத்திற்கேற்ப நில ஆவணங்களை (நிரந்தர கிராம ஆவணங்கள்) மேம்படுத்துதல்.

(iii) ஆக்கிரமிப்புகளை கண்டறிதல், எல்லைக் கற்களை பராமரித்தல், புல எல்லைகளை அத்துக் காட்டுதல் போன்ற இதர பணிகள்.

## 5.3 2012–2013–ம் ஆண்டிற்கான கொள்கைகளும் / திட்டங்களும்

### 5.3.1 பட்டா மாறுதல் மனுக்கள் மீதான விரைவு நடவடிக்கைகள்

அரசாணை (நிலை) எண்.210, வருவாய்த்துறை, நாள் 08.07.2011ல், வட்ட அலுவலகங்களில் பட்டா மாறுதல் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள புதிய நெறிமுறைகளை உருவாக்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்து வட்ட

அலுவலகங்களில் நிலஅளவைப் பிரிவில் இருந்த அனைத்து காலியிடங்களும் நிரப்பப்பட்டதுடன், இப்பணியினை அரசாணையில் தெரிவித்துள்ள காலவரையறைக்குள் முடித்திட நிலஅளவைப் பணியாளர்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளனர். பட்டா மாற்றம் கோரும் மனுக்களின் மீதான நடவடிக்கைகள் குறித்த காலவரையறைக்குள் முடிக்கப்படுவதை உறுதிசெய்ய இப்பணியின் முன்னேற்றம் குறித்து காலாந்திர ஆய்வும் செய்யப்படுகின்றது.

பட்டா மாறுதல் பணி தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக அனைத்து 220 வட்டாட்சியர் அலுவலகங்களின் நிலஅளவைப் பிரிவிற்கும் தலா ஒரு கணினி, லேசர்ஜெட் அச்சுப்பொறி, தடையில்லா மின்வழங்கி, கணினிக்கான மேசை, நாற்காலி மற்றும் பல்வகைப் பணியாற்றும் எந்திரம் (சிறுவகை நகலி – ஸ்கேன் – அச்சுப் பொறி) ஆகியவை நிலஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் மீதமிருந்த தொகையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் நடவடிக்கையை பலப்படுத்தும் நோக்குடன் மேலும் ஒரு கணினி, அச்சுப்பொறி மற்றும் தடையில்லா மின் வழங்கி ஆகியவற்றை அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வட்ட அலுவலக கணினிகளை ஒன்றிணைக்க தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கான அகண்ட பரப்பு ஒன்றிணைப்பு வலையம் (TNSWAN) அமைக்கும் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பட்டா மாற்ற மனுக்களின் மீதான அண்மைக்கால புள்ளி விவரங்களை அவ்வப்போது, இணையதளத்தில் பதிவேற்றம் செய்தும் பணியின் நிலைமை மீதான நடவடிக்கையை உன்னிப்பாக கண்காணித்திட உரிய மென்பொருளை தேசிய தகவல் மையத்தின் மூலம் உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 5.3.2 தேசிய நிலஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்

இத்திட்டம் மத்திய நிதி உதவி பெறும் திட்டமாகும். இதன் முக்கிய நோக்கமானது நிலஆவணங்களை செம்மைப்படுத்துதல், மாறுதல்களை அவ்வப்போது தானாக ஏற்றுக் கொள்ளுதல், ஆவணம் மற்றும் உள்ளபடியான நிலத்தின் பதிவுகளையும் ஒன்றிணைத்தல், பதிவுத் துறையையும் மற்றும் வருவாய் துறையையும் ஒருங்கிணைத்தல் ஆகும்.

இத்துறையிலிருந்து அனுப்பப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.468.57 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்துள்ளது. அதில் முதல் தவணையாக ரூபாய் 468.57 இலட்சத்தில், ரூ.281.14 இலட்சத்திற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. (ரூ.468.57 இலட்சத்தில் 60 விழுக்காடு) அத்தொகை கீழ்க்கண்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இத்திட்டத்தினை இரு மாவட்டங்களில் செயல்படுத்த மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | மத்திய அரசின் நிதி ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | மத்திய அரசு முதல் தவணையில் (60%) வழங்கிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) | தமிழக அரசின் பங்களிப்பாக (இணையான கொடை) வழங்கப்பட வேண்டிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1) | காஞ்சிபுரம் மாவட்டத்தின் 10 வட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தின் 11 வட்டங்களிலும் நவீன பதிவுரு நில ஆவணங்களை நிர்வகிக்கும் மையங்கள் ஏற்படுத்துதல். | 525.00 இலட்சம் (50 : 50 விழுக்காடு மத்திய மாநில அரசு பங்களிப்புடன்) | 262.50 | 157.50 | 157.50 |
| 2) | காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நகர்ப்புற நில ஆவணங்களின் புள்ளி விவரங்களை பதிவு செய்தல். | 20.00 (100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியுடன்) | 10.00 | 6.00 | -- |
| 3) | தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி மைய வளாகத்தில் தேசிய நிலஅளவை ஆவணங்களை நவீன மயமாக்கும் மையம் ஒன்று உருவாக்குதல் | 196.08 (100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியுடன்) | 196.07 | 117.64 | -- |
| | மொத்தம் | | 468.57 | 281.14 | 157.50 |

**மேற்படி நிதியை பயன்படுத்தி,**

(அ) தேசிய நிலஆவணங்களை நவீனப்படுத்தும் திட்டத்தின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி, காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வட்ட நிலஆவண நிர்வாக மையங்கள் ஏற்படுத்தப்படும். அவை தகவல் சேமிப்பு கருவிகளைக் கொண்ட தகவல் இருப்பு பகுதி, கணினிகள், அச்சுப் பொறிகள், வலை இணைப்பு ஆகியவை அடங்கிய 'நிருவாக பகுதி' பொதுமக்கள் அமர்வதற்கான வரவேற்பு காத்திருப்பு வசதிகள் கொண்ட 'பொதுமக்கள் பணிவிடை பகுதி' ஆகிய உள்கட்டமைப்புகளை உள்ளடக்கியதாக அமைக்கப்படும்.

(ஆ) அனைத்து மாவட்டங்களிலும் வெளி ஆதாரப் பணிமுறை மூலமாக, நகர்ப்புற நிலஆவணங்களை கணினியேற்றம் செய்யப்படும்.

(இ) தேசிய நிலஆவணங்களை நவீனமாக்கும் திட்டத்திற்கான பயிற்சி மையம் ஒன்று தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு பயிற்சி பள்ளியில் நிர்மானிக்கப்படும், அதன் பயன்பாட்டிற்காக நவீன நிலஅளவை உபகரணங்களும் இவ்வரசால் வழங்கப்படும்.

## 5.4 முன்னேற்றத்தில் உள்ள நிலஅளவைப் பணிகள்

### 5.4.1 நத்தம் நிலஅளவை

மாநிலத்தில் உள்ள 220 வட்டங்களுள் 218– வட்டங்களில் நத்தம் நிலஅளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தின் சோழிங்கநல்லூர் வட்டத்திலும், திருவள்ளூர் மாவட்டத்தின் மாதவரம் வட்டத்திலும் நத்தம் நிலஅளவைப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி சூன் 2012க்கு முன்பாக நிறைவு செய்யப்படும்.

### 5.4.2 நகரஅளவை

மாநிலத்தில் உள்ள 10 மாநகராட்சிகளில், 5 மாநகராட்சியில் நகரளவை பணி முடிக்கப்பட்டுள்ளது. 3 மாநராட்சிகளில் பணி நடைபெற்று வருகிறது (சென்னை, திருப்பூர், வேலூர்). அதேபோல், மாநிலத்தில் உள்ள 150 நகராட்சிகளில், 97 நகராட்சிகளில் நகரளவைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 11 நகராட்சிகளில் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2012–2013 ஆண்டுகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, குறித்த காலவரைக்குள் முடிக்கப்படும். தற்போது பணி நடைபெற்று வரும் பகுதிகளில் பணிமுடிக்கப்பட்ட பின்னர், மீதமுள்ள மாநகராட்சிகள் / நகராட்சிகளிலும் படிப்படியாக பணிகள் முடிக்கப்படும்.

### 5.4.3 நவீன நிலஅளவை திட்ட அலுவலகங்கள்

எட்டு மாவட்டங்களில் (அதாவது, திருவள்ளூர், வேலூர், கோவை, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், மதுரை மற்றும் திருநெல்வேலி) கணினி மற்றும் தொடர்புடைய உபகரணங்கள், டோட்டல் ஸ்டேஷன், பிளாட்டர் மற்றும் வரைபட மென்பொருள் ஆகிய அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன நிலஅளவை திட்ட அலுவலகங்களை துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி 8 மாவட்டங்களில் புதிதாக நகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட கிராமப் பகுதிகளில் நவீன நிலஅளவை மேற்கொள்ளப்படும். இப்பணி நிதிநிலைக்கேற்ப படிப்படியாக இதர மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

### 5.5 ஆணையரகம் மற்றும் மத்திய நிலஅளவை அலுவலகத்தை கணினி மயமாக்குதல்

மின் ஆளுமையை முழுமையாக செயல்படுத்தும் பொருட்டு, நிலஅளவை ஆணையரகத்தின் அனைத்து இருக்கைகளுக்கும் சிற்றறை அமைத்து கணினி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிற்றறைகள் அமைக்கும் பணி பொதுப்பணித் துறை மூலமாக நடைபெற்று வருகிறது. கணினி மற்றும் இதர உபகரணங்கள் எல்காட் மூலம் நிறுவப்படும். அதேபோல், மாநில அரசால் பகுதி–II திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட

நிதியிலிருந்து மத்திய நிலஅளவை அலுவலகத்தை கணினிமயமாக்கும் பணி ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ளது. ஆவண காப்பகத்தில் உள்ள பழைய நிலஅளவை ஆவணங்களை ஸ்கேன் செய்து பாதுகாப்பதும், அவற்றை எதிர்கால தேவைக்கு பயன்படுத்துவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். கணினி மற்றும் உபகரணங்களும் நிறுவப்பட்டுள்ளன. ஸ்கேனர்கள், பிளாட்டர்கள் ஆகியவையும் விரைவில் வழங்கப்படும். இப்பணி 2012–2013ம் ஆண்டில் முடிக்கப்படும்.

## 5.6 வெளிஆதார முறை மூலம் தொழில்நுட்ப உதவி பெறுதல்

மத்திய அரசின் நிதி உதவிபெறும் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட நிதியை பயன்படுத்தி சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் நிலஅளவை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் மூலமாக தொழில்நுட்ப தகுதிகொண்ட நபர்களை நியமிக்கவும், அந்நபர்களைக் கொண்டு, துறைப் பணியாளர்களுக்கு நவீன நிலஅளவை மற்றும் வரைபட தயாரிப்பில் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பணியாளர்களில் ஒருசிலர் ஒரத்தநாடு நிலஅளவைப்

பயிற்சி பள்ளியில் நவீன நிலஅளவைக் கருவிகளை பயன்படுத்த பயிற்சியாளர்களாக நியமிக்கப்படுவர்.

## 5.7 நிலவரித்திட்டம்

நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கத்தின்படி, நிலஉடைமையாளர்களிடமிருந்து, நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசுக்குரிய பாகமாக பெறும் உரிமை இருந்து வந்துள்ளது. இதற்குரிய பரிமாற்ற பண மதிப்பை 'நிலவரி' என்றும், இதனை கணக்கிடும் முறை வருவாய் 'நிலவரித்திட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. இரயத்துவாரி நிலவரித்திட்டத்தின் கீழ் மண்ணின் கூட்டமைப்பு, மண்ணின் பண்புகளுக்கேற்ற தரம் மற்றும் பிரிவுகள், மற்றும் விளைச்சலை பாதிக்கக்கூடிய இதர காரணங்களான மண்ணின் விளைவிக்கும் திறன் ஆகியவைகளின் அடிப்படையில் "நிலவரி" நிர்ணயம் செய்யப்படுகிறது.

வருவாயைப் பெருக்கும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் நில விளைச்சலில் பாதி அளவுக்கு மிகாமல் குடியானவர்களிடமிருந்து நிலவரியாக வசூலிக்கலாம் என்ற கொள்கையை (Half–net-principle) பின்பற்றி அதன் அடிப்படையில் நிலவரியை வசூலித்தனர்.

குடியானவர்களிடமிருந்து ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்கள் மூலமாக நிலவரி வசூலிக்கப்பட்டு வந்த நிலையால் குடியானவர்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தார்கள். குடியானவர்களிடமிருந்து நேரடியாக அரசே நிலவரியை வசூலிக்கும் ரயத்துவாரி முறை (Ryotwari Settlement) அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே குடியானவர்கள் மீதிருந்த நிலவரிச்சுமை வெகுவாக குறைந்தது.

நாடு விடுதலை அடைந்தபின் பல்வேறு நிலச் சீர்திருத்த சட்டங்கள் இயற்றப்பட்டு மக்கள் நலம் சார்ந்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அரசுக்கும் ரயத்துக்களுக்குமிடையே இருந்த இடைத்தரகர்களை நீக்கப் பல்வேறு நிலவரித்திட்ட சட்டங்கள் இயற்றப்பட்டு இடைத்தரகர்கள் நீக்கப்பட்டனர். பல்வேறு நிலவரித்திட்ட சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டம் முடிவுற்று **1.** கிராம வரைபடம் **2.** புலப்பட புத்தகம் **3.** தூய அடங்கல் **4.** தூய சிட்டா **5.** ஆக்ரமண வரைபடங்கள் மற்றும் பட்டியல்கள் **6.** மனைவரிப் பதிவேடு மற்றும் மனைவரி புலபடங்கள் (நகர்ப்புறங்களுக்கு மட்டும்) ஆகிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு பராமரிப்பு பணிகளுக்காகவும் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை பதியவும் ஏதுவாக

மாவட்ட வருவாய் நிருவாகத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றன.

**5.8 தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம், 26/1948)**

எஸ்டேட்டுகளின் நில உடைமையாளர்களிடமிருந்த உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டம் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையில் இருந்த அனைத்துவகை இடைத்தரகர்களான ஜமீன்தார்கள், மேல்வார உரிமைபெற்ற இனாம்தாரர்கள் ஆகியோர்களை நீக்கி அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அளித்தது. இதன்படி அனைத்து எஸ்டேட்டுகளும் நியமனத் தேதியில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு ரயத்துவாரி நிலவரித்திட்டம் அமல்படுத்தப்பட்டது.

அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த **5092** எஸ்டேட்டுகளில் முழுவதுமாக நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டது. பயனடைந்தோர் எண்ணிக்கை **23,33,840.**

## 5.9 தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ் நாடு சட்டம் 26/1963)

### 5.9.1 இனாம்

இந்து மன்னர்கள் காலத்திலும், முகலாய மன்னர்கள் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும், படைவீரர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மத அமைப்புகளுக்கும், தர்ம அமைப்புகளுக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் சான்றோர்களுக்கும் நிலவரி இல்லாமலோ அல்லது குறைந்த அளவுத் தொகை கொடுப்பதற்குட்பட்டோ ஊழியம் செய்வதற்காக நிலங்கள் வழங்கப்பட்டன. இம்முறைக்கு 'இனாம்' என்று பெயர். தமிழ்நாட்டில் உள்ள இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடைமையாளர்களின் உரிமையைக் கைப்பற்றவும், அந்த எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த 2125 எஸ்டேட்டுகளில், 2115 எஸ்டேட்டுகளில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு மீதம் 10 எஸ்டேட்டுகளில் பணி நிலுவையிலுள்ளது. பயனடைந்தோர்களின் எண்ணிக்கை 3,62,118.

## 5.10 தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ் நாடு சட்டம் 27/1963)

அரசால் குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலங்களில், குத்தகை முறையை முடிவுக்கு கொண்டு வந்து குத்தகைதாரர்களிடமிருந்து உரிமையைக் கைப்பற்றி அந்நிலங்களில் ரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த 12 எஸ்டேட்டுகளில் நிலவரித்திட்டம் முழுவதுமாக முடிக்கப்பட்டது. பயனடைந்தோர் எண்ணிக்கை 6003.

## 5.11 தமிழ் நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றல்) சட்டம், 1963 (தமிழ் நாடு சட்டம் 30/1963)

### 5.11.1 சிறு இனாம்

ஒரு இனாமுக்கான உரிமைப்பட்டயத்தில் இனாம் கொடுக்கப்பட்ட நிலங்கள் காணி, ஏக்கர், சென்ட் போன்ற நில அளவுகளில் குறிப்பிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்குமானால் அவைகளுக்கு 'சிறு இனாம்' என்று பெயர்.

தமிழ்நாட்டில் உள்ள சிறு இனாம்தாரர்களின் உரிமையை அரசு கைப்பற்றி அவற்றில் ரயத்துவாரி

நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது. இச்சட்டம் உரிமைப்பட்டயத்தின் கீழ் வருகின்ற சிறு இனாம் நிலங்களுக்கு தமிழ்நாடு சட்டம், **26/1948**, **26/1963**–களில் முறையே பிரிவு **17** மற்றும் **14**ன் கீழ் சிறு இனாம் என்று ஏற்கப்பட்ட அனைத்து நிலங்களுக்கும் பொருந்தும்.

இச்சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த உரிமைப்பட்டயங்களின் எண்ணிக்கை **1,37,038** ஆகும். பயனடைந்தோரின் எண்ணிக்கை **5,11,506** ஆகும். இச்சட்டத்தின்கீழ் இன்னும் **5** உரிமைப் பட்டயங்களில் பணி துவங்கப்பட உள்ளது.

## 5.12 தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரி மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ் நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஜென்மம் எஸ்டேட்டுகளில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை கைப்பற்றி அவ்வுடைமைகளில் ரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்த இச்சட்டம் வழி வகை செய்கிறது. மேற்படி சட்டம், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் **9**–வது இணைப்பில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து, சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகள் புதுதில்லி உச்சநீதிமன்றத்தில்

உரிமையியல் மேல்முறையீடு வழக்குகள் மற்றும் நீதிப்பேராணைமனுக்கள் தாக்கல் செய்தனர். இச்சட்டத்தை அரசியலமைப்பின் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதின் செல்லத்தக்க தன்மை குறித்த 3 வழக்குகள் உச்சநீதிமன்ற 9 நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு முடிவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டது. 9 நீதிபதிகள் அடங்கிய குழுவால் 11.01.2007 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி இவ்வழக்குகள் 3 நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு மாற்றப்பட்டு அக்குழுவால் இச்சட்டம் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை உறுதி செய்தும் மனுக்கள் தள்ளுபடி செய்தும் 09.09.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கூடலூர் ஜென்மம் நிலங்கள் நிலவரித்திட்ட அலுவலரால் அரசுக்கு மீட்சி செய்து உத்தரவிடப்பட்ட குத்தகை நிலங்கள் குறித்த ஆணைகளுக்கெதிராக, உதகமண்டலம் மாவட்ட சார்பு நீதிமன்றம் மற்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் சில வழக்குகள் நிலுவையிலுள்ளன.

சிறு எஸ்டேட்தாரர்கள், பிரிவு 8 அல்லது 9இன் கீழ் உரிமை கோரிய 500 மனுக்களில் 313 மனுக்களை தள்ளுபடி செய்து வழங்கிய கூடலூர் நிலவரித்திட்ட அலுவலரின் உத்தரவினை ஆட்சேபித்து உதகமண்டலம்

மாவட்ட நீதிமன்றத்தில் (ஜென்மம் தீர்ப்பாயம்) 260 வழக்குகள் தொடரப்பட்டதில் 6 வழக்குகள் அரசுக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாகியுள்ளது. மேற்படி ஜென்ம தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 6 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதில் இடைக்கால தடையாணை வழங்கப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன. நிலவரித்திட்ட அலுவலரால் மீதமுள்ள 187 மனுக்களின்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மொத்தமுள்ள 80,087.74 ஏக்கர் கூடலூர் ஜென்மம் நிலங்களில் 28,087.03 ஏக்கர் நிலங்களுக்கான நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 52,000.71 ஏக்கர் நிலங்களில் 17,014.43 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு சட்டம் 24/1969இன் பிரிவு 53ன் கீழ் வன நிலமாக அறிவித்து 28.07.2011ல் கூடலூர் நிலவரித்திட்ட அலுவலரால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்களில் நிலவரித்திட்டப் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி அறிவிக்கையினை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 6 ரிட் மனுக்கள் தாக்கல் செய்ததில் தற்போதைய நிலையினை தொடர இடைக்கால ஆணை

பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகளுக்குட்பட்ட **5809.96** ஏக்கர் நிலங்களைத் தவிர்த்து **11,204.47** ஏக்கர் வன நிலங்களை அரசாணை (நிலை) எண்.**363,** வருவாய் [நி.அ.–I(1)]துறை, நாள் **28.11.2011.**ல் வனத்துறைக்கு ஒப்படைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டம் **24/69** பிரிவு **17**–க்கு விதி திருத்தப் பிரேரணை நில நிருவாக ஆணையர் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. எஞ்சியுள்ள இனங்களில் நிலவரித்திட்டம் அமல்படுத்துவது தொடர்பான பணிகள் நிலவரித்திட்ட அலுவலரால் நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.13 தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ் நாடு சட்டம் 31/1973)

இச்சட்டத்தின் கீழ் மொத்தமுள்ள **122** எஸ்டேட்கள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு **100.69** சதுர கிலோமீட்டர் பரப்புகளில் நிலவரித்திட்டம் முடிக்கப்பட்டு நிலவரி விதிக்கப்பட்டுள்ளது.

## 5.14 தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) ரயத்துவாரி நிலவரித்திட்ட சட்டம், 1964 (தமிழ் நாடு சட்டம் 30/1964)

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் ஆகியவற்றிலுள்ள இனாம், ஸ்ரீபண்டாரவகா, ஸ்ரீபாதம் நிலங்கள் நீங்கலான நிலங்களில் நில அளவை செய்யவும் அவற்றில் நிலவரித்திட்டம் அமல்படுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழான பணி முடிவுற்றுள்ளது.

## 5.15 நத்தம் நிலவரித்திட்டம்

அரசாணை (நிலை) எண்.1177, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 30.10.1987–ல், நத்தம் மற்றும் வேளாண்மைக்கு அல்லாமல் இதர காரணங்களுக்கு பயன்படுத்தப்படும் வேளாண்மை நிலங்களில் நத்தம் நில அளவை மேற்கொள்ள அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. நிலஅளவை முடிக்கப்பட்ட நத்தம் நிலங்களில் நிலவரித்திட்டம் செயல்படுத்துவதற்கான அறிவிக்கை அரசாணை (நிலை) எண்.1971, வருவாய்த்துறை, நாள் 14.10.1988ல், ஒப்புதல் அளிக்கப்பட்டு 09.11.1988 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. இவ்வாணைகளின்படி மாநிலத்தில் உள்ள 220

வட்டங்களில், 204 வட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது உதகமண்டலம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாம்பரம், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அம்பத்தூர் மற்றும் மாதவரம் ஆக மொத்தம் 11 வட்டங்களில் இப்பணி துவங்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுநாள் வரை 35,771 நத்தம் மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் 5 வட்டங்களில் நத்தம் நிலவரித்திட்டப் பணி தொடங்கப்பட வேண்டும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் நத்தம் தனியார் நிலங்களில் நிலவரித்திட்டம் துவங்கப்பட்டு 1300 நத்தம் மனைப் பட்டா தயார் செய்யப்பட்டு வழங்கப்பட தயார் நிலையில் உள்ளது.

### 5.16 வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம் 1996–ன் பிரிவு 4–இன் படி, மாநிலம் முழுவதும் வக்ஃப் சொத்துக்கள் கணக்கெடுக்கும் பணி துவங்கப்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர்களின் (கூடுதல் வக்ஃப் ஆணையர்கள்)

அறிக்கைகள் பெறப்பட்ட இனங்களில் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5.17 மலை கிராமங்களில் வருவாய் பின்தொடர்பணி**

அரசாணை (நிலை) எண்.113, வருவாய்த் துறை, நாள் 02.02.95ன் படி, மாநில முழுவதிலுமுள்ள 67 மலை கிராமங்களில் வருவாய் பின் தொடர்பணி தொடர ஆணையிடப்பட்டுள்ளது. 60 கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டு 7 கிராமங்களில் பணி நடைபெற்று வருகிறது. சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், பச்சமலை கிராமத்தில் 2312 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**5.18 நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய்ப் பின் தொடர் பணி**

மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பழைய சென்னை நகரம் நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் வருவாய் ஆவணங்களில் உள்ள பதிவுகளை இன்றைய நிலைக்கு மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கவும், வருவாய் நிர்வாகத்தின் பராமரிப்பிற்காக ஆவணங்களை தயார் செய்து அளிக்கவும், வருவாய் பின் தொடர் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.

மாநிலத்தில் மொத்தமுள்ள 150 நகராட்சிகளில், 5 நகராட்சிகளில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 16 நகராட்சிகளில் இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேலும் மொத்தமுள்ள 10 மாநகராட்சிகளில் 3 மாநகராட்சிகளில் இப்பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 129 நகராட்சிகளிலும், 7 மாநகராட்சிகளிலும் இப்பணி விரிவுப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரையில் 74,544 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பண்டாரவாடை கிராமத்தில் நில உடமை பதிவு மேம்பாட்டு திட்ட அலகு ஒன்று துவங்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**முடிவுரை**

வருவாய்த் துறை பல நூற்றாண்டுகளாக நிருவாகத்தின் மையமாக இருந்து மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்க்கும் அமைப்பாக, திறமையாக நிருவாகத்தை அளித்து வருகிறது. மக்களின் தேவைகளின் அடிப்படையில் அவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சேவைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. திட்டங்களை செம்மையான முறையில் செயல்படுத்தி மக்களுக்கு

அத்திட்டங்களின் பயன்கள் சென்றடைவதை உறுதி செய்கிறது. பொதுமக்கள் அலுவலகங்களுக்கு வரும்போது அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி, அலுவலகத்தில் பணி புரியும் சூழலை மேம்படுத்தி, நவீன கருவிகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை அலுவலர்களுக்கு அளித்து, மக்களுக்கு விரைவான சேவை அளிக்கப்படும். சமுதாயத்தின் உரிமைகளை பாதுகாத்து, மிக மதிப்பு மிக்க ஆதாரமான நிலம் குறித்த உரிமைகளை உறுதிசெய்து, இவை அனைத்துக்கும் மேலாக, இயற்கைச் சீற்றங்களின்போது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி நிவாரண உதவி வழங்கி வருவாய்த் துறை தொடர்ந்து பணியாற்றும்.

**கே.ஏ. செங்கோட்டையன்,**
**வருவாய்த் துறை அமைச்சர்**